# மனுஜோதி

*வனாந்தரத்திலிருந்து உங்களை அழைக்கும் சத்தம்*

**அனைத்து வேதங்களின் ஆய்வு இதழ்**

**ஒன்றே குலம்!** ✡ **ஒருவனே தேவன்!**



ஆசிரியர்
வெளியிடுபவர்
**D. பால் உப்பாஸ் N. லாறி**

**உதவி ஆசிரியர்**
**தூத்துக்குடி K.P. பாலு**
**J. பாலசந்தர்**


சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். – **குறள்**


இது ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் போதனைகளைப் பின்பற்றுகிறவர்களுக்கும், ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற இயக்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டவர்களுக்காகவும் பிரசுரிக்கப்படுகிறது. பிற மதத்தினரைப் புண்படுத்துவதற்காக அல்ல.

இந்த இதழைப் பெற விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும்.

செய்திகள், கருத்துக்கள், துணுக்குகள், கட்டுரைகள், அனைத்தும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.



**மனுஜோதி ஆசிரமம்**
**சத்திய நகரம்**
**ஓடைமறிச்சான் அஞ்சல்**
**(வழி) பாப்பாக்குடி - 627 602**
**திருநெல்வேலி மாவட்டம்**
**போன் : 04634-274543**


**அன்பார்ந்த ஆன்மீக சகோதர சகோதரிகளே,**

**ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் வாழ்த்துக்கள்!**

பிப்ரவரி மாதம் 20–ம் தேதி முதல் 24–ம் தேதி வரை “ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் மகிமையடைந்த தினவிழா” மனுஜோதி ஆசிரமத்தில், வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழ் நாட்டிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் அநேக பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். மலேசியா மற்றும் அமெரிக்காவிலிருந்தும் சில பக்தர்கள் கலந்து கொண்டனர். ஹுப்ளியிலிருந்து ஜகத்குரு சந்திர சேகர சிவயோகி ராஜேந்திர மஹா சுவாமிஜியும், சாத்வி ஜினாந்தாதேவி அவர்களும் மகிமையடைந்த தின விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

ஜனவரி மாதம் 20–ம் தேதியன்று விசாகப்பட்டினத்தில் நடந்த வி.ஜி.பி. உலக தமிழ் சங்கம் நடத்திய திருக்குறள் மாநாட்டில் நானும், என்னுடைய சகோதரரும், இன்னும் மனுஜோதி ஆசிரமத்தின் சில முக்கிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டோம். ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் போதனைகள் அடங்கிய கைப்பிரதிகள், புஸ்தகங்கள், சி.டி.க்கள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு விநியோகம் செய்தோம்.

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற கொள்கையை இந்தியாவின் கிழக்குப் பகுதியான கௌஹாத்தி, மேகாலயாவில் உள்ள மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு, மனுஜோதி ஆசிரமத்திலிருந்து ஆன்மீகப் பிரச்சார பயணம் மேற்கொண்டோம். அங்குள்ள மக்களுக்கு ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் போதனைகள் எடுத்துக் கூறப்பட்டது.

ஆதியிலே ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா மூல வித்தாக தம் உயிரை நீத்தார். ஸ்ரீமத் பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் 10–ம் அத்தியாயத்தில் 39–ம் சுலோகத்தில் இவ்வாறு கூறுகிறார்: *“அர்ஜுனா,*

*எல்லாப் பொருள்களுக்கும் எது வித்தோ அதுவும் நானே....*" என்கிறார். விவிலியத்திலும் இறைவன் ஜீவனுள்ள வித்து என்று அழைக்கப்படுகிறார். **I பேதுரு 1:23:** "*அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே*" எதற்காக அவர் உயிர் தியாகம் செய்ய வேண்டும்? ஒரு வித்து தனித்திருந்தால், அது அதிக பலனைக் கொடுக்க முடியாது. அது பூமியிலே நடப்படும்போது, தன்னைப் போலவே அநேக வித்துக்களை கொண்டுவர இயலும். இதற்காகத்தான் அவர் உயிர் தியாகம் செய்தார். இறைவன்தான் மூலவித்தாக இருக்கிறார். அந்த மூலவித்திற்குள் அநேக வித்துக்கள் இருக்கின்றன. ஆதியிலே இறைவன் எனும் மூலவித்து நடப்பட்டதினால், அவருக்குள் இருக்கின்ற நாமெல்லாரும் இவ்வுலகத்தில் தோன்றினோம். மறுபடியுமாக இறைவன் என்ற மூல வித்துடன் நாம் எவ்வாறு ஒன்றாக கலக்க வேண்டும்? எவ்வாறு அது சாத்தியமாகும்? நாம் நமக்காக வாழாமல், இறைவனுக்காக வாழும்போது, உங்கள் 'சுயம்' அல்லது 'தனித்தன்மை' அழிந்து விடுகிறது. நீங்கள் வாழ்ந்தாலும் அவருக்காக வாழ்கிறீர்கள். உங்களுடைய விருப்பம் எல்லாம் அழிந்து விடுகிறது. அவருடைய விருப்பத்தை மாத்திரம்தான் செய்கிறீர்கள். இப்படி நீங்கள் வாழும்போது இறைவனுடன் ஒன்றர கலந்து விடுகிறீர்கள். நாம் நமக்காக வாழாமல், ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவிற்காக வாழும்போது, அவரில் ஒரு பாகமாகி அவருடன் இணையலாம். நாமும் அவருக்காக வாழும்போது, நம்முடைய தனித்தன்மை அல்லது சுயத்தை இழந்து, அவருக்காக வாழ்ந்து பலன் கொடுக்கிறோம்.

இப்படிப்பட்டவர்கள் "இறைவனின் வித்து" என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களை நாம் எவ்வாறு கண்டறிந்து கொள்வது? அவர்கள் தாழ்மையாக இருப்பார்கள், எந்த விஷயத்திலும் பெருமை பாராட்டமாட்டார்கள். வைக்கோல் நிமிர்ந்து நிற்கும். ஆனால் வித்தையுடைய கதிர் வளைந்து நிற்பதைப்போல, இறைவனின் வித்தாக இருப்பவர்கள் தாழ்மை என்ற குணத்தை உடையவர்களாக இருப்பார்கள். இராணுவத்திலுள்ள இராணுவ வீரர்களைப் போல ஒழுக்கமாக இருப்பார்கள். அவர்கள் எல்லாவற்றிற்கும் இறைவன்மேல் சார்ந்து வாழ்வார்கள். அவர்கள் எங்கே சென்றாலும் இறைவன் அவர்களைப் பாதுகாக்கிறார். அவர்கள் ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற கொள்கையைப் பின்பற்றுவார்கள். ஒரு மரத்தில் பழங்கள் அதிகமாக இருந்தால், அதுதான் அதிகமான கல்லடியைப் பெறும். நற்குணங்கள் நிறைந்த இறைவனுடைய வித்தாக இருப்பவர்களும், பழுத்த கனிகளையுடைய மரத்தைப் போல அதிக கல்லடிகளைப் பெறுவார்கள். அவர்கள் அதைப்பெரிதுபடுத்தமாட்டார்கள். மற்றவர்கள் தங்களை உபயோகித்துக் கொள்கிறார்கள் என்பதைக் குறித்து கவலைப்படாமல், மரமானது காய்த்துக்கொண்டே இருப்பதைப்போல, தங்களுக்காக வாழாமல் அவர்கள் பிறருக்காகவே வாழுவார்கள். இவர்கள் இறைவனைப் போலவே தியாக ஜீவிகளாக திகழ்கிறார்கள். இப்படி தங்கள் வாழ்க்கையின் மூலமாக இறைவனின் சுபாவங்களைப் பிரதிபலித்து, இறைவன் இருக்கிறார் என்பதை மக்களுக்கு நிரூபிக்கிறார்கள். இறைவன் இருக்கிறார் என்பதை வாயினால் சொல்லாமல், தங்கள் செய்கையின் மூலமாக மக்களுக்கு வலியுறுத்துகிறார்கள். நீங்களும் இறைவன் இருக்கிறார் என்பதை நிரூபிக்க இம்முறையைக் கடைப்பிடிக்கலாம்.

இந்த இதழை நீங்களும் படித்து இன்புற்று, மற்றவர்களும் படித்துப் பயன்பெற உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு கொடுத்து உதவுங்கள். தர்மத்தை நிலைநாட்டும் பணியில் அனைவருக்கும் பங்கு உண்டு. இந்த உலகத்தை மூடியிருக்கும் இருளை அகற்ற மனுஜோதி தீபத்தை ஏற்றி வையுங்கள். இருள் தானாக மறைந்துவிடும்.

**வானம், பூமி, சமுத்திரம் யாவையும் படைத்த பரமபுருஷராகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியாம் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவுக்கே எங்கள் கனம், துதி, மகிமை யாவும் உரித்தாகுக**

**- ஆசிரியர்**

# யார் சிறந்த பக்தன்?

என்னை விட்டால் இந்த ஊரில் உயர்ந்த பக்தன் யார்? தூக்கத்தில்கூட "கிருஷ்ணா, ராமா" என்றுதானே சொல்லிக் கொண்டே இருக்கிறேன் என்ற ஆணவம் சிலரிடம் இருந்தது. அவர்கள்தான் நாரதர், பிரகலாதன், திரௌபதி, அர்ஜுனன் ஆகியோர்.

இந்தநான்கு பேருக்குமே பாடம் புகட்ட கிருஷ்ணர் எண்ணினார். அர்ஜுனனை தேரில் ஏற்றிக்கொண்டு, காட்டுவழியே போய்க்கொண்டிருந்தார். வழியில், ஒரு மகரிஷி கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தார். "கண்ணா, கமண்டலம் ஏந்த வேண்டிய இந்த மகான் ஏன் கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்? உனக்கு ஏதாவது தெரியுமா? என்று கேட்க, எனக்கென்ன தெரியும்? நானும் உன்னோடுதானே வருகிறேன். இப்போது அது தெரிந்து நமக்கென்ன ஆகப்போகிறது? "நம் வேலையைப் பார்த்துக்கொண்டு போவோம்" என அதில் அக்கறையே இல்லாதவர் போல் நடித்தார் அந்த மாயவன்.

அர்ஜுனன் அடம் பிடிக்கவே, தேரை நிறுத்தி விட்டு அவர் அருகே சென்று வணங்கினார்கள். மகரிஷி! சாந்த மூர்த்தியான தாங்கள் கத்தியைத் தீட்டும் நோக்கமென்ன? என்றனர். அதுவா! நாரதன்னு ஒருத்தன் இருக்கிறானே, அவன் என் சுவாமி தூங்கும் நேரம்கூட பார்க்காமல், அவன் இஷ்டத்திற்கு வைகுண்டத்துக்குப்போய் நாராயணா! நாராயணா! என்று கத்தி, அவர் தூக்கத்துக்கு இடைஞ்சல் செய்கிறான். அவனை குத்தப் போகிறேன் என்றவரிடம் ஓஹோ! என்ற கண்ணன் கிளம்பத் தயாரானார்.

அவரை மகரிஷி நிறுத்தினார். இன்னும் கேள்! பிரகலாதன்னு ஒரு பொடியன். எங்க சுவாமி எங்கேயும் இருக்கிறார் என்று சொல்லி, எல்லா இடத்திலும் அவரை நிற்க வைத்து பதறடித்தான். ஒரு தூணுக்குள் இருப்பதாகச் சொல்லி அவரை மூச்சுவிட முடியாமல் செய்தான். இப்படி அவரைத் துன்பப்படுத்திய அவனுக்கும், இந்தக் கத்தி பதில் சொல்லப் போகிறது என்றவரிடம் கிளம்பட்டுமா! என்றார் கண்ணன்.

இன்னும் கேளுங்க! என்று அவர்களை நிறுத்திய மகரிஷி திரௌபதின்னு ஒருத்தி. அவளது சேலையை துச்சாதனன் பறித்தான். ஒன்றுக்கு ஐந்து புருஷன்கள் உள்ள அவள் புருஷன்மாரை கூப்பிட வேண்டியதுதானே! கண்ணனைக் கூப்பிட்டாள். அவன் கை வலிக்க புடவை தந்தான். அவளும் என் கையில் சிக்கினால்... என்று பற்களைக் கடித்த அவரை சாந்தம் செய்ய முயன்றார் கண்ணன்.

இன்னும் கேளுங்கப்பா! இன்னும் ஒருத்தன் இருக்கிறானே என்றார். அட... சீக்கிரம் சொல்லுங்க சுவாமி! உங்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகுது. எங்க வேலையைப் பார்க்க போகணும் என்ற கண்ணனிடம், அர்ஜுனன் என்று ஒரு பயல் இருக்கிறானாம். அவனை இதுவரை நான் பார்த்ததில்லை. அவன் என் பரமாத்மாவையே தேர் ஓட்ட வைத்திருக்கிறான். உலகத்துக்கே அவர்தான் எஜமான். ஆனால் அந்தச் சிறுவனுக்கு வேலைக்காரனாக இருக்கிறார். கண்ணனையே வேலைக்காரனாக்கியவனுக்கு காத்திருக்கிறது கத்திக்குத்து என்று முடித்தார்.

பார்த்தாயா அர்ஜுனா! நீ மட்டுமே என்னிடம் பக்தி கொண்டதாக எண்ணாதே! இவரைப் போன்ற ஆயிரம் பக்திமான்கள் உலகில் இருக்கிறார்கள். அவர்கள் என்மீது வைத்துள்ள அன்புக்கு எல்லையே கிடையாது என்றார் கண்ணன். அர்ஜுனன் தன் அறியாமையை எண்ணி தலைகுனிந்தான்.

---

**இறைவன் மேல் நம்பிக்கை வைப்பது நற்குணமாகும், அவரை சந்தேகிப்பது பாவமாகும்.**

**இறைவன் ஒருவரே என்று அறிந்துகொள். இறைவனில் வேற்றுமையைக் காண்பது பாவமாகும்.**

- சுவாமி விவேகானந்தர்

# கடவுளின் வருகைபற்றி வள்ளலார் கூறுவது என்ன?

இந்தக் கலியுகத்தின் கடைசி நாட்களில் இறைவனின் வருகையைப் பற்றி மனிதருக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் வழிகளை செவ்வைப்படுத்த இறைவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் திருவருட்பா என்னும் தெய்வ மணம் கமழும் தீந்தமிழ் காவியத்தின் மூலம் மனித சமுதாயத்திற்கு இறை உண்மைகளை அஞ்சாது ஆணித்தரமாக எடுத்துரைத்து, அவர்களை சீர்திருத்த இறைவனால் அனுப்பப்பட்ட அருட்கவிஞர்தான் திருவருட் பிரகாச வள்ளலார் என்று ஆஸ்தீகப் பெருமக்களால் அன்புடன் அழைக்கப்படும் இராமலிங்க அடிகள் ஆவார்.

கி.பி. 19-ம் நூற்றாண்டில் 1823-ம் வருடம் அக்டோபர் மாதம் 5-ம் நாள் சிதம்பரம் அருகேயுள்ள திருமருதூர் கிராமத்தில் இராமையா பிள்ளை என்பவருக்கும், சின்னம்மையாருக்கும், ஆண்டவன் அருள்பெற்று இவ்வுலகில் பிறந்தவர்தான் இராமலிங்க அடிகள். அகத்தே கருத்துப் புறத்தே வெளுத் திருக்கும் உலகோர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்கத்து அடை வித்திடவும் அடைந்தவரெல்லாம் இகத்தே (இந்த உலகிலேயே) பரத்தைப் பெற்று மகிழ்ந்திடவும் இறைவன் தன்னை அனுப்பி, அருள் செய்திருக்கிறார் என்று அவரை தனது அருட்பாவில் குறிப்பிட்டிருக்கிறார். (ஆறாம் திருமுறைப் பாடல் எண் 1273).

“ஒன்றே குலம், ஒருவனே தேவன்” திருமூலர் அருளியதையே சத்தியம் என்று அடிப்படையாக கொண்டிருந்த வள்ளலார் அவர்கள் கடவுளின் வருகை பற்றி இயம்புதல் என்ற தலைப்பின்கீழ் திருவருட்பா 6-ம் திருமுறையில் 1443-வது பாடல் துவக்கி 1452-வது பாடல் முடிய மொத்தம் 19 பாடல்களில் கலியுக முடிவில் வரவிருக்கும் இறைவனைப் பற்றிய உண்மைகளை சத்தான தமிழ்ச் சொல்லில் முத்து முத்தாக, தித்திக்கும் தேனாக எடுத்துரைத்திருக்கிறார். அவரது திருவருட்பாவின் ஏனைய பாடல்கள் பலவற்றுள்ளும் கடவுளின் வருகையைப் பற்றிய காரியங்கள் காணக்கிடக்கின்றன.

அது மறுக்க முடியாத, மறைக்க முடியாத மாபெரும் உண்மையாகும். அப்பாடல்கள் அனைத்தும் கலியுகத்தில் களையிழந்து வாழும் மக்கள் அனைவரையும் தேற்றுவதாகவும், எச்சரிப்பதாகவும் அமைந்துள்ளது. வாசகர் படித்து இன்புற வேண்டுகிறோம்.

திருவருட்பா 6-ம் திருமுறை பாடல் எண் 1443. வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ள வசதியாக இந்தப் பாடல் அடியிற்கண்டவாறு பிரித்து பொருள் விளங்க எழுதப்பட்டுள்ளது.

*அப்பன் வருதருணம் இதே ஐயம் இலை கண்டாய்*
*அஞ்சாதே அஞ்சாதே அகிலமிசை உள்ளார்க்கு*
*எப்பறவேசத் திம் என்று உரைத்திடுநின் உரைக்கோர்*
*எள்ளவும் புழுதுவராது என் இறைவர் ஆணை*
*இப்புவியோ, வானகமும் வானகத்தின் புறத்தும்*
*எவ்வுயிரும் எவ்வெவரும் ஏத்தி மகிழ்ந்திடவே*
*செப்பம்உறு திருவருட் பேரொளிவடிவாய்க் களித்தே*
*செத்தாரை எழுப்புதல் நாந்திண்ணம் உணர்மனனே*

விளக்கவுரை:- அப்பன் வருதருணம் இதே. காணக்கூடாத பரமாத்மாவாகிய கடவுள் இந்த கலியுக முடிவில் ஒரு மாம்ச சரீரம் எடுத்து வருகிறார். அந்த மாம்ச சரீரத்தில் தம்மை வெளிப்படுத்தும் கடவுளையே அப்பன் என்று இங்கு வள்ளலார் குறிப்பிடுகிறார். எல்லா வேதங்களும் இந்தக் கலியுக முடிவில் கடவுள் மனிதனாக வருகிறார் என்பதை பறைசாற்றுகின்றன. இவையெல்லா வற்றையும் ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் செய்திகள் மூலம் நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம்.

கடவுள் ஒரு மனித வடிவில் வருவாரா? என்று அநேகர் சந்தேகம் கொள்கின்றனர். அவர்களுக்குத்தான் அடுத்தபடியாக ஐயம் இலை கண்டாய் என்று வள்ளலார் குறிப்பிடுகிறார். கடவுள் மனிதனாக வருவது உறுதி. எந்த சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை.

ஆகவே இந்த உலகமெங்கிலும் உள்ள அனைவருக்கும் அவர்களுடைய தளர்ச்சி நீங்கத்தக்கதாக இந்தச் செய்தியை சத்தியம் என்று நீ உரைப்பாயாக. அப்படி நீ உரைக்கும் போது, உன்னுடைய உரைக்கு எள் அளவுகூட தவறு நேராது. அஞ்ச வேண்டாம். அது அப்படியே நிறைவேறும். இது என்னுடைய இறைவனின் கட்டளை ஆகும். இந்த பூலோகமோ, பரலோகமோ அல்லது பரலோகத்திற்கு புறம்பேயுள்ள மக்களோ எந்த உயிராக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் போற்றி புகழ்ந்திடத் தக்கதாக மகிழ்ச்சியுடன், அழகிய அந்த அருள் பேரொளியாகிய இறைவன் ஒரு மனித உருவெடுத்து, இந்தப் பூமியில் நடுவீதியில் வந்து உலாவுவார். அவர் மாண்டவர்களை எழுப்புவார். இது நிச்சயம், இதை உணர்ந்துகொள் மனமே!

ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா இந்தப் பூமியில் மானிடனாக வாழ்ந்தபோது, உண்மையாகவே மாண்டவர்கள் சிலரை எழுப்பியுள்ளார். கடவுளின் வேதங்களில் எழுதப்பட்டுள்ள பரிசுத்தமான அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படியாமல் வெறுமனே பாரம்பரியங்களையும், ஆச்சாரங்களையும் பின்பற்றி தங்கள் ஆத்துமாக்களில் மாண்ட மக்கள் அனைவரையும் ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா தமது தூய்மையான உபதேசத்தால் உயிர்ப்பித்து அவர்களுக்கு சாந்தி அருளியிருக்கிறார். அவர்கள் ஆன்மீக புத்துணர்வு பெற்று அவருக்கு மகிமையாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது "மாண்டாரை எழுப்புதல் நாந்திண்ணம்" என்ற வார்த்தைகளின் பொருளாக விளங்குகின்றது என்பதையும் நாம் உணர்ந்துகொள்கிறோம்.

.......வள்ளலார் மீண்டும் வருவார்

- **செல்லப்பாண்டியன்,** மனுஜோதி ஆசிரமம்

## நடுநிலை

1. என் ஆன்மா என்னிடம் சற்றே கடுமையாகப் பேசியது. "புகழ்ச்சியில் மகிழாதே, குறை சொல்லும்போது விரக்தி கொள்ளாதே".
2. இந்த அறிவுரையைக் கேட்கும் வரையும் என் பணியின் மதிப்பு பற்றி சந்தேகத்தோடுதான் இருந்திருக்கிறேன்.
3. இப்போது புரிந்துவிட்டது. எந்தப் பாராட்டையும் எதிர்பார்க்காமலேயே மரங்கள் வசந்தத்தில் மலர்கின்றன. கோடையில் கனிகளைச் சுமக்கின்றன.
4. குறை சொல்லி விடுவார்களோ என்ற குறுகுறுப்பு இல்லாமலேயே இலையுதிர் காலத்தில் தம் இலைகளை உதிர்க்கின்றன. குளிர்காலத்தில் வெறுமையாக நிற்கின்றன.

**- கலீல் ஜிப்ரான்**

ஒருவர் ஓம் சக்தி என்று சொன்னார். நீங்கள் ஏன் ஓம் என்று சேர்த்துச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். 'அவர்கள் அப்படி ஓம் சேர்த்துச் சொல்லச் சொன்னார்கள்' என்றார். ஓம் என்பது புருஷனுடைய பெயர். புருஷனுடைய பெயரையும் சேர்த்துச் சொன்னால்தான் ஜீவன் கிடைக்கும். புருஷனையே அறியாவிட்டால் அவர் பெயரை எப்படிச் சொல்ல முடியும். நாம் பரம புருஷனை அறிந்திருக்கிறோம். நீங்கள் அறிந்திருக்கிறீர்களா ? சிலர் 'ஹரி' என்று அழைக்கிறார்கள். சிலர் 'லா' (அல்லாஹ்) என்று அழைக்கிறார்கள்.

**- ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா**

# நவ நாகரீக விஞ்ஞான உலகில் ஆன்மீக புத்தகங்களினால் பயன் என்ன?

இன்றைக்கு இவ்வுலகில் ஜனங்கள் கடவுளைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்வதில்லை. யாராவது ஒரு மனிதன் எழுதியுள்ள தத்துவங்களைத்தான் பேசுகிறார்கள். உண்மையில் எந்த மகான்களாலும் பகவத் கீதைக்கு விளக்கம் தர இயலாது. பகவத்கீதையை எழுதியவர்தான் இறங்கி வந்து அதை விளக்க முடியும். மனிதனின் இயல்பு என்னவென்றால் தன் சொந்த மதத்திலிருந்தோ, வம்சத்திலிருந்தோ ஒருவர் வந்தால்தான் நம்புவான். ஆனால் நாராயணரது உதவியின்றி விவிலியம் அல்லது குர்-ஆன் அல்லது பகவத்கீதை அல்லது ஸ்ரீமத் பாகவதத்தின் உண்மையான அர்த்தத்தை நீங்கள் அறிந்துகொள்ள முடியாது.

ஒரு சமயம் ஒரு மனிதன் இயேசுவினிடம் வந்து, எனக்கு நித்தியஜீவன் வேண்டும் என்று கேட்டான். ஸ்ரீமத் பகவத் கீதையிலும்கூட நித்தியஜீவன் அதாவது சாகா ஜீவனைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. நித்தியஜீவன் என்றால் மரணமில்லாத பெருவாழ்வு என்று பொருள். ஒரு மனிதன் புசிக்கவும் குடிக்கவும் சந்தோஷமாயிருந்து, நாளைக்கு சாகலாம் என்பதற்காக உண்டாக்கப்பட்டிருந்தால், அவன் இந்த உலகத்திலேயே மிகவும் பரிதபிக்கப்படத்தக்க சிருஷ்டியாய் இருக்கிறான். இப்பொழுது ஐம்பது வருடங்கள் தான் ஜனங்களால் உயிர்வாழ முடிகிறது. ஐம்பது வயதுக்குள்ளாகவே அவர்கள் மிகவும் பலவீனமடைந்துவிடுகிறார்கள். நூறு வயதுவரை வாழ்ந்து கொண்டிருந்த மக்களை 1960-ம் வருடங்களில் நாம் காணமுடிந்தது. முற்காலங்களில் ஜனங்கள் ஐந்நூறு வருடங்கள், ஆயிரம் வருடங்கள் வாழ்ந்ததாக நாம் வேதங்களில் வாசிக்கிறோம். ஆனால் சாகா ஜீவனைப் பெற ஒரு வழியுண்டு. சாகா ஜீவனை நீங்கள் எப்படி பெறமுடியும்? நாராயணர் ஒருவரிடம்தான் சாகா ஜீவன் இருக்கிறது. நீங்கள் அவருக்குள் இருந்தால் மரணத்தை ஜெயிக்கமுடியும். நீங்கள் அவருக்கு வெளியே இருந்தால் சாவீர்கள். இந்த உலகத்திலுள்ள மிகப் பெரிய இரகசியம் இதுதான். சாகா ஜீவன் அல்லது ஜீவன் முக்தி என்று ஒன்று இருக்கிறது என்பதை விவிலியம் வாசிப்பதினால் அறிந்துகொள்கிறோம். அத்துடன் நம் முன்னோர் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர் என்ற உண்மையும் புலப்படுகிறது.

இன்று நமது நம்பிக்கை என்ன? எதன்கீழும் ஒன்றுசேராத ஒரு கூட்ட இந்துக்கள் இந்தியாவில் உள்ளனர். அவர்கள் நாராயணர் ஒருவரின்கீழ் மட்டுமே ஒன்றுபடுவார்கள். அவர்கள் இத்தனை வருடங்களாக காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதற்காக காந்திஜியை தெரிந்தெடுக்கவில்லை? ஏனென்றால் அவர், அவர்களுக்கு பரிகாரமல்ல. எவரேனும் வந்து நமக்காக போராடும் வரை நாம் பொறுமையாகக் காத்திருக்கிறோம். நீங்கள் அமைதியாக இருந்தால் அவர் உங்களுக்காக போராடுவார். ஆகவே நமது நாட்டில் எதிர்காலத்தில் நாம் மற்ற தேசங்களுக்குப் போதிக்க வேண்டும். அதற்கு முன்னதாக நாராயணரின்கீழ் ஜனங்களை ஒன்றுசேர்க்க இறைவன் விரும்புகிறார். நீங்கள் பகவத்கீதையை வாசிப்பீர்களென்றால், இந்த இரகசியத்தை அறிந்து கொள்வீர்கள். இந்த இரகசியம் ஜனங்களுக்குத் தெரியாது. நாராயணர் ஸ்ரீ கிருஷ்ணர்மூலம் பேசியபோது அவரும்கூட வரப்போகும் இந்த அவதாரத்தைப் பற்றி குறிப்புகளைக் கொடுத்தார். மனிதனாக அவர் பேசும்பொழுது தன்னைப் பற்றிய ஒரு வெளிப்படுத்தலை அவர் கொடுக்கிறார். இல்லையெனில் நீங்கள் அவரை ஒரு மனிதனாக நம்பமாட்டீர்கள். ஸ்ரீமத் பகவத் கீதையை வாசிப்பதின் மூலம் ஸ்ரீ கிருஷ்ணர் மனிதனாக திரும்பி வரப்போகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அர்ஜுனன், "உமது ரூபத்தை எனக்குக் காண்பியும்" என்று கேட்டான். அவர் விஸ்வரூபத்தைக் காண்பித்தார். அது ஒரு பயங்கரமான ரூபம். இரண்டாவதாக, தயைகூர்ந்து எனக்கு விஷ்ணு ரூபத்தைக் காண்பியுங்கள்" என்று கூறினான். அப்பொழுது அவர் அதைக் காண்பித்தார். அதன்பிறகு தனது இனிய மனிதரூபத்தை (சௌம்ய ரூபத்தைக்) காண்பித்தார்.

அந்த சாந்தமான மனித ரூபம் ஸ்ரீ கிருஷ்ணரின் ரூபம் அல்ல. அது வரப்போகிற அவதாரத்தின் ரூபம். ஸ்ரீமத்பகவத்கீதையின் வாயிலாக இறைவன் அவதாரமாக, ஒரு மனிதனாக வருவார் என்பதை அறிகின்றோம். நீங்கள் 'பகவத்கீதையை' படிப்பீர்களென்றால் கடைசி அவதாரமாக வருபவர் ஒரு அவதாரம் அல்ல என்பதை அறிவீர்கள். நாராயணரே தம்முடைய சொந்த சரீரத்தில் வருகிறார். அது அவர் எப்பொழுதும் இருக்கும் ரூபமாகும். அதனால் தான் அவர் (உலகில்) வரும்போது அவரால் அழிக்க முடிகிறது. முன்பு அவர் சிருஷ்டிக்க வந்தார். இப்பொழுது தீய சக்திகளை அழிக்க வந்திருக்கிறார்.

ஸ்ரீ கிருஷ்ணர்: "நீங்கள் நாராயணருக்குள் சென்றால் உங்களுக்கு மரணமில்லை. நீங்கள் மறுபிறவியை மேற்கொள்ள முடியும்" என்றார். ஸ்ரீ கிருஷ்ணர் காண்பித்த சாந்தமான மனித ரூபம் அவரது சொந்த ரூபம் அல்ல. பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு திரும்பி வரப்போகின்ற அதே ரூபத்தை அவர் காண்பிக்கின்றார். அந்த ரூபத்தை அவர் அர்ஜுனனுக்குக் காண்பித்தார். அவன் அந்த ரூபத்தை நம்பியபொழுது அவனுக்கு மீட்பு அல்லது விமோச்சனம் கிடைக்கிறது. நாம் எவ்வாறு விமோச்சனம் அடைய முடியும் என்ற உண்மையை ஸ்ரீமத் பகவத்கீதையின் மூலமாக அறிகிறோம். அதாவது வரப்போகின்ற அவதாரத்தை நம்பினால்தான் நாம் விமோச்சனம் அடைய முடியும் என்ற கருத்தையும் ஸ்ரீமத் பகவத்கீதையை வாசிப்பதின் மூலமாக அறிந்து கொள்கிறோம்.

கலியுகத்தின் முடிவில் கடவுள் (கிருஷ்ணர்) வரவேண்டும் என்றுமூன்று வேதங்களும் (கீதை) சொல்லுகிறது. அவர்கள் வெவ்வேறு ஆட்களல்ல, அது ஒருவரைத்தான் குறிக்கிறது. நீங்கள் பகவத்கீதையை வாசிப்பீர்களென்றால், நீங்கள் குர்-ஆனை வாசிப்பீர்களென்றால், நீங்கள் விவிலியத்தை வாசிப்பீர்களென்றால், நீங்கள் வேதங்களை வாசிப்பீர்களென்றால் அங்கு எவ்வித முரண்பாட்டையும் காணமாட்டீர்கள்.

அகிலத்திரட்டு என்ற வேதத்தை வாசித்தால் யுகங்கள் 4 அல்ல 7 என்பதை அறிந்து கொள்ளலாம். திருக்குர்-ஆனை வாசித்தாலும், விவிலியத்தை வாசித்தாலும், கொன்றை வேந்தன் வாசித்தாலும் பெற்றோருக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்றும் அறிந்து கொள்ளலாம். **திருக்குர்-ஆன், 10-ம் அத்தியாயம் ஸூரா17: வசனம் 23:** "பெற்றோர்க்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கின்றான்; அவ்விருவரில் ஒருவரோ, அல்லது அவ்விருவருமோ உம்மிடத்தில் திண்ணமாக முதுமையை அடைந்துவிட்டால், அவ்விருவருக்கும் இழித்துக் கூறப்படும் வார்த்தைகளிலுள்ள "சீ" என்று கூட நீ சொல்ல வேண்டாம்; உம்மிடமிருந்து அவ்விருவரையும் விரட்டிவிடவும் வேண்டாம்; அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக!"

இந்தியாவில் ஒரு கட்டளை (சட்டம்) பிறப்பிக்கப்பட்டு, நீங்கள் அந்த கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால் நீங்கள் கொல்லப்படவேண்டும். நீங்கள் ஒரு தேசத்துரோகி என்று அழைக்கப்படுவீர்கள். ஏனென்றால் அது ஒரு நாட்டின் சட்டம். நீங்கள் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால் கொலை செய்யப்பட வேண்டும். நாராயணர் ஒரு மிகப்பெரிய ராஜா. அவரது பகவத்கீதைக்கு நீங்கள் கட்டாயமாகக் கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் அதை வாசிக்காமல் இருந்துகொண்டு அது எனக்குத் தெரியாது என்று கூறமுடியாது. நீங்கள் அதை வாசித்து நாராயணர் என்ன கூறியிருக்கிறார் என்றும், எது உங்களுக்குச் சாபத்தைக் கொண்டுவரும் என்றும் கண்டுபிடிக்க வேண்டும். வேதங்களை வாசிப்பதினால்தான் இறைவன் நமக்கு கொடுத்திருக்கின்ற ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் அறிந்துகொள்ள முடியும். வேதங்கள் என்பது இறைவன் நமக்கு ஏற்படுத்திய சட்டமாக இருக்கிறது. அதை அறிந்துகொள்ளாமல் இருப்பது நம்முடைய தவறாகும். அது எனக்குத் தெரியாது என்றுகூற முடியாது. ஆகவே வேதங்களை வாசித்து, இறைவனுடைய சட்டங்களை நாம் அறிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். சட்டங்களை அறிந்துகொண்டு நாம் பின்பற்றும்போது, அது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். சாபத்திலிருந்து நீங்கள் விடுபடுவீர்கள்.

**– தொடரும்....**

# என்ன சொல்லுகிறது இஸ்லாம்?

***அரன் என்றாலும் வரம் தருவாய். அரி என்றாலும் சரி என்பாய்.***
***கர்த்தர் என்றாலும் அர்த்தம் நீயே. அல்லா எனில் நீ அல்லாமல் வேறு யார்?***
***இல்லை என்பர் சிலர். அந்த இல்லை என்பதும் உன் பேரே.***
***சொந்தப் பெயர் ஒன்று இல்லாதாய், எந்தப் பெயரால் உனை அழைப்பேன்?***

இஸ்லாம் என்றாலே முழுமையாக இறைவனிடத்திலே தன்னை ஒப்புவித்தல் என அர்த்தம். "கடவுளே நீ இயக்குகிறாய், நான் இயங்குகிறேன். துன்பம் வந்தாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில் அதுவும் நீ தந்த பரிசு". இப்படி ஏற்றுக்கொண்டால் இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை. சரியான மன நிலைக்கு வந்து விடுவார்கள்.

எல்லாவற்றையும் செய்வது நானே என்று எண்ணுவதால்தான் துன்பம் வருகிறது. பார்வையற்றவர்கள் யானையைப் பார்த்த கதை நமக்குத் தெரியும். அவரவர் அவரவர்களுக்குத் தெரிந்த இடங்களிலே நின்று இறைவனைத் தரிசித்திருக்கிறார்கள். நமது அறிவு வரையறைக்குட்பட்டது. படைக்கப்பட்ட அறிவு படைத்தவனை முழுமையாகக் காணமுடியாது. முழு உண்மையை மனித அறிவால் புரிந்துகொள்ள முடியாது.

மத வேற்றுமைகளை இஸ்லாம் கூறவே இல்லை. இறைவன், எல்லா நாட்டிற்கும், எல்லா சமயத்திற்கும், எல்லா காலத்திற்கும் வேதங்களின் மூலமாகவும் திருத்தூதர்களின் மூலமாகவும் வழிகாட்டுகிறான். எல்லா மதங்களையும், இஸ்லாம் இறைவனது மார்க்கம் என்று சொல்கின்றது. திருத்தூதர்கள் வாயிலாக எல்லா நாட்டு மக்களுக்கும், எல்லா மதத்தினருக்கும் இறைவன் வழிகாட்டுகிறான். அதனால் வேதங்கள் எனப்படுபவை யாவும் ஒரே மூலத்திலிருந்தே வருகின்றன. ஒரு சமயத்தை மற்ற சமயத்தவர் புரிந்துகொள்வது இல்லை. மாறாக, தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். இதுவே இன்றுள்ள பிரச்சினையாகும்.

தன் தோட்டத்துப் பூவுக்கே வாசம் உண்டு, அடுத்தவர் தோட்டத்தில் இருப்பது பூவே இல்லை என்கிறார்கள். எல்லா பூக்களும் நிறத்தில் வேறுபடலாம். ஆனால் அவற்றில் இருக்கும் தேன் ஒரே சுவையுடையது. இது தேனீக்குத்தான் தெரியும். எல்லா மதத்திற்கும் அடிப்படை ஒன்றே என்பது ஞானிக்குத்தான் தெரியும். சமயவாதிக்குத் தெரியாது. அவன் தன் தோட்டத்தில் இருக்கும் பூவே பூ என்று சாதிப்பான். ரிக் வேதத்து வாக்கியம் இது. ஏகம் சத் விப்ரா: பஹுதா வதந்தி – இறைவன் ஒருவனே, நாம் அவனைப் பல பெயரில் அழைக்கிறோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயர் வைத்து, தனித்தனி ஆண்டவன் என நினைக்கிறார்கள்.

சர்ச்சோ, யூதர்களின் சபையோ (synagogue), மஸ்ஜித்தோ அல்லது எந்த மதத்தின் வழிபாட்டுத் தலமானாலும், எங்கே இறைவனின் பெயர் உச்சரிக்கப்படுகிறதோ, அதற்குப் பாதிப்பை ஏற்படுத்துபவன் மனிதனே அல்ல. இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இறைவனுக்கு ஆயிரம் திருப்பெயர்கள் உண்டு என்று குர்–ஆன் கூறுகிறது. இதை மக்கள் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். பெயரில் வேற்றுமை இருந்தாலும் கூறப்படும் பொருள் ஒன்றுதானே.

மதங்கள் ஏன் வெவ்வேறாக இருக்கின்றன? ஏன் இறைவன் ஒரே மதத்தை உண்டாக்கக்கூடாது? குர்–ஆனில் பதில் உள்ளது. ஒவ்வொரு இடத்திலிருந்தும் புறப்படுபவன் வெவ்வேறு வழியாகத்தான் வந்தடைய வேண்டும். வடக்கிலிருந்து வருகிறவன் தெற்கு நோக்கி வர வேண்டும். தெற்கிலிருந்து வருபவன் வடக்கு நோக்கிச் சென்றால்தான் இலக்கை அடைவான். மாறாக சண்டையிலேயே இவர்கள் நேரத்தைச் செலவிட்டால் எங்கும் போக முடியாது.

சென்னை என்று வழிகாட்டிப் பலகையில் உள்ளது. நடந்து அல்லது வாகனத்தில் போனால்தானே போய்ச் சேர முடியும். சென்னை என்ற போர்டைப் பார்த்தபடி பலர் அங்கேயே நிற்கிறார்கள். அந்த வழிகாட்டிப் பலகைதான் நமது மார்க்கம். இஸ்லாம் ஒரு மார்க்கம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வழி.

வெவ்வேறானவர்களுக்கு வெவ்வேறு வழியை நான் வகுத்திருக்கிறேன். இது குர்–ஆனில் வரும் வார்த்தைகள். கீதையிலேயும் இது இருக்கிறது. நான் பல வழிகளை

உண்டாக்கியிருக்கிறேன், நீ வந்து சேர். நபிகள் நாயகம் சொன்னார்: இந்தியாவில் ஒரு தூதர் உதித்தார். அவர் கறுப்பானவர். காலா என்பது அவர் பெயர். ஸ்ரீ கிருஷ்ணரைத்தான் அப்படி வர்ணிக்கிறார். காலா என்றால் கறுப்பு ஆகும்.

இறைவன் ஒருவனே வணங்குவதற்குரியவன், வேறு யாருமில்லை, இருக்கவும் முடியாது. ஏனென்றால் படைத்தவன் ஒருவன்தான். சகல அண்டசராசரங்களையும், எல்லா உலகங்களையும் படைத்தவன் ஒருவன்தான். இதை நாம் புரிந்துகொண்டால் சமயச் சண்டைகள் கிடையாது. எல்லா சமய நோய்களுக்கும் அது நிவாரணம்.

உலகம் இயங்குவதைப் பார்த்தே இதைத் தெரிந்துகொள்ளலாம். சூரியன், சந்திரன், பூமி எல்லாவற்றையும் படைத்தவன் ஒரே இறைவனாகத்தான் இருக்க முடியும். சூரியனைப் படைத்தவர் வேறு கடவுள், சந்திரனைப் படைத்தவர் வேறு கடவுள் என்றால் என்னவாகும்? குழப்பம்தான் மிஞ்சும்.

ஒரே இறைவன் என்பதால்தான் ஒரே சீரான ஒழுங்கில் போய்க் கொண்டிருக்கிறது. இதற்காக லட்சத்து இருபத்தி நான்காயிரம் தூதர்களை அனுப்ப வேண்டியுள்ளது. மனிதர்களுக்கு எத்தனை பேரை அனுப்பியும் புத்தி வரவில்லை. திருந்தமாட்டேன் என்கிறார்கள். அதனால்தான் இவ்வளவு தூதர்கள் தோன்றினார்கள். ஆண்டவன் ஒரே மதமாகப் படைத்திருக்கக்கூடாதா? என்று நாம் கேட்கலாம். மனிதனாகவே உண்மையைத் தெரிந்துகொண்டு தேர்ந்தெடுக்கிறானா பார்ப்போம் என இறைவன் மனிதர்களுக்குத் தேர்வு வைக்கிறார்.

இறை தூதர்களை நான் அனுப்பியிருக்கிறேன் என்கிறது இஸ்லாம். தூதர்களிடம் இறைவன், ‘நீ கட்டாயப்படுத்தக்கூடாது. உண்மையை எடுத்து வை. ஏற்பவன் ஏற்றுக்கொள்ளட்டும். இல்லை என்றால் நான் அவனைப் பார்த்துக் கொள்கிறேன்’ என்று கூறி அனுப்புகிறார். இறைவன் நபிகள் நாயகத்திற்கும் கூறுகிறார்.

உண்மையை எடுத்துரைப்பது மட்டுமே உங்கள் வேலை. ஏற்பதும் ஏற்காததும் அவர்கள் விருப்பம். உங்களை அவர்களின் பாதுகாவலராக அனுப்பவில்லை. எனது தூதராகத்தான் அனுப்புகிறேன். ஆகவே கட்டாயப்படுத்தக் கூடாது. மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை. கடவுளை வெவ்வேறு பெயரால் வணங்குகிறார்கள். அவர்களை இகழ்ச்சியாகப் பேசாதீர்கள் என்று குர்–ஆனில் ஒரு வாக்கியம் உள்ளது.

‘வசுதைவ குடும்பகம்’ என்று இந்து மதம் சொல்லுகிறது. எல்லா உயிரினமும் ஒரே குடும்பம். எல்லோரையும் பேதம் பார்க்காமல் எவன் நேசிக்கிறானோ, அவனையே இறைவன் நேசிப்பான் என்று இஸ்லாம் கூறுகிறது. விஞ்ஞானம் பிரித்துப் பார்க்கிறது. அஞ்ஞானம் எதையும் பார்ப்பதில்லை.மெஞ்ஞானம் மட்டுமே இணைத்துப் பார்க்கும். யார் அபேதமாகப் பார்க்கிறானோ அவன்தான் சத்தியத்தை, ஞானத்தை அறிந்துகொள்ள முடியும். பிரித்துப் பார்ப்பவனால் ஞானத்தை அறிய முடியாது. ஒன்றாகக் காண்பதுவே காட்சி என்று ஔவையார் சொல்கிறார். காட்சி என்றால் தரிசனம். மனிதர்களை மட்டுமல்ல, உயிரினங்கள் அனைத்தையும் ஒன்றாகப் பார்க்க வேண்டும்.

எல்லா உயிர்களும் நீரில் பிறந்தன என்று எல்லா வேதங்களிலும் உள்ளது. அதைப் பரிணாமக் கொள்கையால் புரிந்துகொள்ள வேண்டும். இறைவன் ஒருவன் என்பதால்தான், உயிர்கள் நீரில் பிறந்தன என்ற வாக்கியம் எல்லா வேதத்திலும் இருக்கிறது. ஆதிவாசிகளுடைய நாட்டுப்புறப் பாடலிலும் உள்ளது. ஆச்சரியமாக இல்லையா? எந்த விஞ்ஞானியாலும் கண்டு பிடிக்க முடியாதவை பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய புத்தகங்களில் உள்ளன.

நம்முடைய எஜமான் இறைவன் ஆவார். நாம் அவருடன் வேலை செய்கிறோம். அவர் மேளத்தை அடிக்கும்போது நாம் முன்னேறி நடைபோடுகிறோம். அவர் பாடும்போது நாம் அவருடைய இசைக்கேற்ப நடனமாடுகிறோம். **- ரவீந்திரநாத் தாகூர்**

இறைவன் ஒருவன் என்பதை நம்பி ஏற்றுக்கொண்டு, நற்செயல்களை செய்யுங்கள் என இறைவன் குர்–ஆனில் தெளிவாகக் கூறுகிறார். நீ பாவம் செய்ததற்குப் பரிகாரம் ஒரு புண்ணியம் செய். நற்செயல்கள்தான் உன் பாவத்தைப் போக்குவதற்கான, தவற்றை தீர்ப்பதற்கான வழி. "எல்லோரையும் நேசி, யாரையும் பழிக்காதே". பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாயோ, அதையே நீ பிறருக்குச் செய் என்கிறார் நபிகள் நாயகம்.

இது மகாபாரதத்திலும் உள்ளது. புத்தரும், இயேசுவும் கூறியிருக்கிறார்கள். சமணத்திலும் உள்ளது. ஒவ்வொரு மதத்தினரும் இதைக் கடைபிடித்தாலே போதும். மதத்தின் பெயரால் போர் செய்யத் தயாராக இருக்கிறான். ஆனால் மத நூல்களைப் படித்துக் கடைபிடிக்க தயாராக இல்லை. அவரவர் மதத்தை நன்றாகப் படித்து அதிலுள்ள நல்ல விஷயங்களைக் கடைபிடித்தாலே போதும். அதைச் செய்வதில்லை.

ஒருவனை யாராவது கொலை செய்துவிட்டால் அவன் முழு மனித இனத்தையும் கொன்றவன் ஆவான். அவன் மனிதனே இல்லை என்கிறது குர்–ஆன். உன் இனம் தவறு செய்கிறது, அநீதி செய்கிறது என்று தெரிந்திருந்தும் அதற்கு ஆதரவு அளித்தால் அதற்குப் பெயரே இனவெறி என்றார் நபிகள் நாயகம்.

அதுதானே இங்கு ஜாதி, மதம் மற்றும் இனம் ஆகியவற்றின் பெயரால் நடக்கிறது. நீதியிலிருந்து தவறாதீர்கள். உங்கள் பகைவரிடத்திலும் நீங்கள் அநீதியாக நடக்காதீர்கள். அங்கேயும் நீங்கள் நீதியைத் தான் கடைபிடிக்க வேண்டும் என்று குர்–ஆன் கூறுகிறது.

தீவிரவாதத்திற்கு இஸ்லாத்தில் இடமே கிடையாது. சிலர் அப்படி செய்கிறார்கள் என்றால் அவர்கள் முஸ்லீம்களே கிடையாது. ஒரு முஸ்லீம் தீவிரவாதியாக இருக்க முடியாது. ஒரு தீவிரவாதி முஸ்லீமாக இருக்க முடியாது. முஸ்லீம் என்று இல்லை, எந்த மதவாதியுமே தீவிரவாதியாக இருக்க முடியாது. எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் சரி, இன்னொருவனை அடி, உதை, கொலை செய் என்று எந்த மதம் சொல்கிறது?

பகைவனை நேசி என்றுதானே சொல்லுகிறது! இறைவன் அன்பானவன். உயிர்களுக்கு நீ தீங்கிழைத்தால் அவன் சகித்துக் கொள்ளமாட்டான். இதுதான் அனைத்து மதங்களின் செய்தியாகும்.

**- கவிக்கோ அப்துல் ரகுமான்**

### உண்மையான பக்தனின் நம்பிக்கை

ஒரு சூஃபி பக்தனும் அவருடைய மனைவியும் ஒரு படகில் சென்றுகொண்டிருந்தபோது, ஆற்றில் புயலடித்து படகு மூழ்கும் தருவாயில் இருந்தது. சூஃபி பக்தன் புயலைப் பற்றி கவலைப்படாமல் அமைதியாக இருந்தான். அதைப்பார்த்த அவனுடைய மனைவி, எப்படி உங்களால் இந்த நேரத்தில் சாதாரணமாக இருக்க முடிகிறது? என்று கேட்டாள்.

அவன் தன் பையிலிருந்து ஒரு கத்தியை சட்டென்று எடுத்து தன் மனைவியின் கழுத்தில் வைத்துவிட்டு, உனக்கு பயமாக இல்லையா? என்று கேட்டான். அதற்கு அவள்: இல்லை, ஏனெனில் கத்தியை கழுத்தில் வைத்தவன், நான் நேசிக்கும் என்னுடைய கணவன்தானே என்கிறாள்.

அதற்கு அவன்: புயல் அல்லது கத்தி மிகவும் ஆபத்தானதுதான். உனக்கு என்மேல் நம்பிக்கை இருப்பதுபோல, எனக்கு இறைவன்மீது நம்பிக்கை இருக்கிறது, புயலின்மேல் நம்பிக்கை இல்லை என்றான். இதுவே ஒரு உண்மையான பக்தனின் நம்பிக்கையாகும்.

விஞ்ஞான உலகிலே அமெரிக்கா பெரிய தேசமாக இருக்கலாம். ஆனால் கடவுளைப் பற்றிய அறிவிலோ இந்தியா உலகிலேயே பெரிய தேசமாகும். இந்தியர்கள் ஏழைகளாக இருக்கலாம் ஆனால் கடவுளை அறியும் அறிவில் நாம் பணக்காரார்கள் அல்லது உயர்ந்தவர்கள். நான் இந்தியன் (கலியுகக் கண்ணன்) என்பதில் பெருமை அடைகிறேன். அமெரிக்கா கத்தோலிக்க மார்க்கத்துடன் சேரும், சீனாவுடனும் சேர்ந்துகொள்ளும். அது முடிந்தவுடன் அந்நாடு அழிக்கப்படும்.

**- ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா**

# இறைவனுக்குப் பிரியமான எட்டு மலர்கள்

சென்ற இதழின் தொடர்ச்சி.....

**சென்ற இதழில் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்வதைப் பற்றி பார்த்தோம். இந்த இதழில் மன்னிப்பைப் பற்றி பார்ப்போம்.**

மன்னிப்பு என்பதற்கு அர்த்தம் கூறுவது எளிதானதல்ல. நம் வாழ்க்கையில் ஒரு முறையேனும் அந்த பாலத்தை நாம் கடந்தாக வேண்டும். மன்னித்தல் என்பது மனமறிந்து தானாகவே முன் வந்து, கருணையுடன், மன உறுதியுடன் செய்யும் ஒரு செயலாகும். மன்னித்தல் என்பது ஒரு முறை மட்டும் செய்யும் செயல் அல்ல. அது நம்முடைய சகிப்புத்தன்மை, குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் ஆகியவற்றின் வெளிப்பாடாக இருக்கிறது.

மன்னித்தல் என்பது தொடர்ச்சியாக நடைபெறுகின்ற சம்பவங்கள் அல்ல. அது நாம் தெரிந்தெடுக்கின்ற வாழ்க்கைப் பாதையாகும். மன்னித்தல் என்பது சுயக்கட்டுப்பாடு, சுய ஒழுக்கம் என்பவற்றின் மூலமாக நம்முடைய தாழ்ந்த நிலையில் இருந்து தாண்டிச் செல்லக்கூடிய ஒன்றாகும். எல்லாவற்றிற்கும் மேலாக மன்னித்தல் என்பது எல்லாரிடத்திலும் உள்ள தெய்வீகத் தன்மையை வெளிக்கொணரும் ஒரு முயற்சியாகும்.

ஆனாலும், மன்னித்தல் என்பது எளிதானதல்ல. பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளைக் கொன்றவர்களை மன்னிப்பார்களா? தாய்மார்கள் எவ்வாறு தங்களுடைய மகள்களை மானபங்கப் படுத்தியவர்களை மன்னிப்பார்கள்? தங்களுடைய குடும்பத்தையும், சிநேகிதர் களையும் படுகொலை செய்தவர்களை எவ்வாறு மன்னிக்க முடியும்?

அது எளிதானதல்ல என்பதை நாம் ஆமோதிக்கிறோம். மன்னிக்காவிட்டால் நாம் குற்றவாளியைப்போல உணர்ச்சியற்ற வனாகவும், கொடூரமானவனாகவும் மாற வேண்டியதுதான். மன்னித்தல் ஒருவனை பகையுணர்ச்சியிலிருந்தும், வேதனையி லிருந்தும், வெட்கத்திலிருந்தும் நடந்து முடிந்து சம்பவத்தின் மூலமாக ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையில் இருந்தும் விடுவிக்கின்றது.

மன்னிப்பதற்கு ஏதாவது எல்லை உண்டா? மன்னித்தல் ஒருவனை குற்றவாளி யில்லை என்பதோ அல்லது ஒருவனின் தீயசெய்கையைக் கவனியாமல் விட்டு விடுவதென்பதோ ஆகாது. எழுத்தாளர் C.S. லூயிஸ் என்பவர் மன்னித்தல் என்பது பாரபட்சமற்ற நிலைக்கு ஒருவனை கொண்டு செல்கிறது. மன்னிக்கவே முடியாத வற்றையும்கூட மன்னிக்க வேண்டிய சூழ்நிலைக்கு அழைத்துச் செல்கிறது. நாம் யாரையாவது மன்னித்து விட்டால் அவர்களுடைய குற்றங்களை நாம் ஒதுக்கிவிடுகிறோம் என்று குறிப்பிடுகிறார்.

உண்மையான மன்னிப்பு என்றால் செய்யப்பட்ட குற்றத்தை முழுமையாக கவனித்து, அதின் தீவிரத்தையும், கொடூரத்தையும், பயங்கரத்தையும் உணர்ந்து கொண்ட பின்னர், அதை செய்தவரை மன்னித்து, குற்றத்தை செய்த நபருடன் முழுமையாக ஒப்புரவாகுவதாகும். ஜார்ஜ் மேக் டோனால்டு என்பவர் மன்னிப்பை பற்றி இவ்வாறு கூறுகிறார்: மன்னிக்க மறுப்பது என்பது கொலை செய்வதைக் காட்டிலும் கொடூரமானது. ஏனெனில் கொலை செய்வது உணர்ச்சிவசப்படுவதால் ஒரு க்ஷணப் பொழுதில் செய்யப்படும் காரியமாகும். ஆனால் மன்னிக்க மறுப்பது என்பது உங்கள் மனது கடினமாகியதால் நீங்கள் தெரிந்தெடுக்கின்ற செயலாகிறது. இதே கருத்து விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளது. **I யோவான் 3:15:** *"தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனா யிருக்கிறான்; மனுஷ கொலைபாதக னெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைக்காது என்று அறிவீர்கள்".* ஒருவனை மன்னிக்கும்போது அன்பினிமித்தமாக அப்படி செய்கிறோம். குற்றம் செய்தவனை, தீங்கிழைத்தவனை அன்பு செய்ய மறுக்கின்றபோது, அதாவது அவனை மன்னிக்க மறுக்கின்றபோது நாம் அவனை கொலை செய்ததற்கு சமமாகும். கொலை செய்தவனுக்கு மன அமைதி இருக்காது. மன அமைதி இல்லாதவன் எவ்வாறு ஜீவன் முக்தியைப் பெற முடியும்? ஆக மன்னிக்க மறுப்பது மன அமைதியை அழிக்கின்றது.

மன்னித்தல் மற்றும் கருணையைக் காண்பிப்பது மன அமைதியின் முக்கிய காரண கர்த்தாவாக விளங்குகிறது.

மன்னித்தல் என்பது ஒரு மகத்தான வெகுமதி அல்லது ஆசீர்வாதம் என்று நாம் உணரும்போது, மன்னிப்பதை ஒரு போராட்டம் என்று நாம் எண்ணமாட்டோம். அன்பு செய்வதா அல்லது பகைப்பதா, தண்டிப்பதா அல்லது மன்னிப்பதா, காயங்களை ஆற்றுவதா அல்லது காயப்படுத்துவதா என்று, மன்னித்தல் என்பது நாம் தெரிந்தெடுக்கும் காரியமாகும். பகை உணர்ச்சியில் மூழ்காமல் நாம் மன சாந்தி, மற்றும் ஒப்புரவாகுதல் என்ற பாதையில் நடக்க விரும்புகிறோம். மன்னித்தல் என்பது எப்பொழுதாவது நாம் செய்யும் செய்கை அல்ல. மாறாக அது நம் நிரந்தரமான குணமாகும்.

மன்னித்தல் என்பது நீதி நியாயத்தைக் காட்டிலும் மேலானது. நீதி நியாயம் தண்டிக்க விரும்புகிறது. மன்னித்தல் தீங்கிழைத்தவனுடன் ஒப்புரவாக நினைக்கிறது. மன்னித்தல் என்பது மகான்களுக்கும், ரிஷிகளுக்கும் உரியது என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆம், அது ஒருவிதத்தில் உண்மையானது. ஏனெனில் இறை அன்புடையவர்களுக்கும், இறை அன்பை ருசித்தவர்களுக்கும் மட்டுமே மன்னிப்பது ஒரு சாதாரண காரியமாக திகழ்கிறது.

ஒருவன் செய்த துரோகத்தை எவ்வாறு நாம் மன்னிப்பது என்று நீங்கள் இறைவனிடம் கேட்கும்போது, இறைவன் என்ன பதிலளிக்கிறார் என்று ஸ்ரீ லஹரி கிருஷ்ணா கூறுகிறார். **"நீங்கள் இறைவனுக்குச் செய்த துரோகத்தைக் காட்டிலும், வேறு யாரும் உங்களுக்கு அதிகமாக துரோகம் செய்யவில்லை"** என்று இறைவன் கூறுகிறார். ஆக மிகப்பெரிய துரோகிகளான நம்மை இறைவன் மன்னித்திருக்கிறார். அப்படியிருக்கும்போது நீ ஏன் உன்னைப் போல இன்னொருவனை மன்னிக்கக்கூடாது? என்று இறைவன் கூறுவதினால் இறைவனை கிரஹித்து உணர்ந்தவர்கள் மற்றவர்கள் செய்யும் குற்றத்தை, துரோகத்தை, தீங்கை மன்னிப்பது எளிதாகி விடுகிறது.

மகாபாரதத்தில் உத்யோக பர்வத்தில் விதுரன் திருதராஷ்டிரரிடம் மன்னிப்பைப் பற்றி இவ்வாறு கூறுகிறான். மன்னித்தலில் ஒரேயொரு குறை இருக்கிறது. அது என்னவென்றால் மன்னிக்கும் நபர் பெலவீனமானவன் என்று மக்கள் நினைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் உண்மையில் மன்னித்தல் மிகப் பெரிய சக்தியாகும். ஸ்ரீமத் பகவத்கீதையில் மன்னித்தல் என்பது திவ்ய நிலையை அடைய பிறந்தவனின் குணாதிசயமாகும் என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறியுள்ளார். மன்னித்தல் என்பது நல்ல ஆரோக்கியத்திற்கு வழிகாட்டி என்று ஸ்ரீ லஹரி கிருஷ்ணா கூறியுள்ளார். ஒருவன் செய்த குற்றத்தை மன்னிக்காதபோது, அவர்மேல் நாம் பகையை வளர்த்துக் கொள்கிறோம். அவனை நாம் எவ்வாறு பழிவாங்குவது என்ற எண்ணம் மேலோங்குகிறது. இத்தகைய பகையுணர்ச்சி ஒருவனை இரவில் தூங்க விடாது. பகையுணர்ச்சியினால் புற்று நோயும் ஏற்படுகிறது.

**மன்னிப்பு என்பது உன்னதமான பண்பாகும் என்பதை விளக்க கீழே கொடுக்கப்பட்ட கதையை வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.**

ஓர் ஊரில் ஒரு நபர் இருந்தான். அவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவளை நல்ல இடத்திலே திருமணம் செய்துகொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்காக மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தான். அவன் கொஞ்சம் வசதியானவன். அதினாலே நிறையபேர் பார்க்க வந்தார்கள். இருந்தாலும் ஒரு நல்ல குணமுள்ள மாப்பிள்ளையாக அமைய வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான். தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருந்தான். கடைசியாக மூன்று பேர் கிடைத்தார்கள். அந்த மூன்று பேரில் யாரை தேர்ந்தெடுப்பது? இதுதான் அவனுக்கு வந்த குழப்பமாகும். இந்த நிலைமையிலேயே ஒரு பெரியவரை தேடிப் போனான். அவரிடம் தன்னுடைய பிரச்சினையைச் சொன்னான். அவர் சிறிது நேரம் யோசித்தார். அதன்பிறகு அந்த மூன்று பேரையும் கூப்பிட்டார். இதோ பாருங்கள், உங்கள் மூன்று பேருக்கும் மூன்று மாதம் கால அவகாசம் தருகிறேன். மூன்று மாதம் கழித்து திரும்பி வரும்போது, இந்த மூன்று மாதத்திலே நீங்கள் செய்த நல்ல காரியம் ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டும். அதை வைத்து உங்களில் ஒருவரை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம் என்றார் பெரியவர்.

மூன்று பேரும் சரி என்று சொல்லிவிட்டு திரும்பிப் போய் விட்டார்கள். மூன்று மாதம் ஆனது. ஒருநாள் திரும்பி மூன்று பேரும் வந்தார்கள். அவர் அவர்களை கூப்பிட்டு உட்கார வைத்தார். இப்பொழுது இந்த மூன்று மாத காலத்திலே நீங்கள் செய்திருக்கிற ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் சொல்லுங்கள் என்றார்.

முதலில் ஒருவன் எழுந்து நின்றான். ஐயா! என்னுடைய தந்தை இறந்தபிறகு அவருடைய கணக்கு வழக்குகளை எடுத்துப் பார்த்தேன். அவர் ஒரு வியாபாரியிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கி இருக்கிறதாக எழுதியிருந்தார். அந்த வியாபாரியும் இப்பொழுது உயிரோடு இல்லை. இருந்தாலும் அந்த வியாபாரியின் மகளைத் தேடி கண்டுபிடித்தேன். கணக்கு புஸ்தகத்தைக் காட்டினேன். என்னுடைய தந்தை உன்னுடைய தந்தையிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறதாக இதோ எழுதியிருக்கிறார். அதினாலே அதைத் திரும்ப கொடுப்பதற்காக வந்தேன் என்று சொல்லி கொடுத்துவிட்டு வந்தேன் என்றான்.

இதைப் பெரியவர் கவனமாக கேட்டார். அடுத்தாக இரண்டாவது இளைஞன் எழுந்தான். ஐயா! நான் போன மாதம் ஒருநாள் ராத்திரி வேளையிலே ஒரு காட்டுப் பாதை வழியாக எங்கள் ஊருக்குப் போய்க்கொண்டு இருந்தேன். ஒரு வழிபோக்கர் அந்த சமயத்திலே அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். அவரிடம் நாலைந்து திருடர்கள் வம்பு வளர்த்து, அவரிடம் இருந்த பொருளையெல்லாம் கொள்ளை அடித்தார்கள். நான் உடனே ஒரு கம்பை எடுத்துகொண்டு ஓடினேன். அந்தத் திருடர்களை அடித்து விரட்டினேன். பொருளையெல்லாம் மீட்டு அந்த வழிபோக்கரிடம் ஒப்படைத்தேன். அவரை பத்திரமாக அழைத்துக்கொண்டு அவர் வீட்டிலே விட்டு விட்டேன் என்று கூறினான்.

இதையும் பெரியவர் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தார். அடுத்தபடியாக மூன்றாவது இளைஞன் எழுந்தான். ஐயா! போன மாதம் ஒருநாள் நான் ஒரு மலைப்பாதை வழியாக போய் கொண்டிருந்தேன். மலை விளிம்பிலே ஒரு மதகுக்கட்டை. அது மேலே ஒரு நபர் படுத்து தூங்கிக் கொண்டிருந்தான். அந்தப் பக்கம் தவறி உருண்டு விழுந்தால் அது அதலபாதாளம்! மலையடிவாரத்திலே போய்தான் விழ வேண்டும். அவ்வளவு பள்ளமான இடமாகும். அது தெரியாமல் அவன் தூங்கிக் கொண்டிருந்தான். நான் உடனே அவன் அருகே ஓடிப்போய் குனிந்து அவன் முகத்தைப் பார்த்தேன். அப்பொழுதுதான் எனக்கு புரிந்தது. அவனை எனக்கு ஏற்கனவே தெரியும். எனக்கு நிறைய கெடுதல் செய்து, இடைஞ்சல் கொடுத்தவன். இருந்தாலும் ஐயோ பாவம் என்று நினைத்து அவனை எழுப்பி பாதுகாப்பாக வேறு ஒரு இடத்திலே படுக்க வைத்துவிட்டு வந்தேன் என்று கூறினான்.

பெரியவர் இதையும் கேட்டார். அவர் அந்த பெண்ணின் தந்தையிடம் இந்த மூன்று பேருமே நல்ல பிள்ளைகள்தான். அதிலே ஒன்றும் சந்தேகமில்லை. இருந்தாலும் இந்த மூன்று பேர் செய்த செயல்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. முதல் இளைஞன் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறான். இந்தக் காலத்தில் இது மாதிரியான இளைஞர்களைப் பார்ப்பது அரிதான காரியம். இருந்தாலும் அவன் கடமையைத்தான் செய்தான். இரண்டாவது இளைஞன் நல்ல வீரன், தைரியசாலி. ஒரு வீரன் எதைச் செய்ய வேண்டுமோ அதைத்தான் இவன் செய்தான். இவன் ஓர் இலட்சிய மனிதன். மூன்றாவது இளைஞன் தன்னுடைய பகைவனுக்கே உதவி செய்திருக்கிறான். அவன் உயிரைக் காப்பாற்றியிருக்கிறான். பகைவனுக்கு அருள்வது என்பது ஒரு சாதாரண மனிதனால் செய்யக்கூடிய காரியமல்ல. பகையை மறப்பதும், மன்னிப்பதும், பகைவனுக்கு அருள்வதும் தெய்வீகப் பண்புகள். அதனால் இவனையே உன்னுடைய மகளுக்கு ஏற்ற மாப்பிள்ளையாக தேர்ந்தெடுக்கலாம் என்றார் பெரியவர். ஆக ஒருவனை மன்னித்து, அவன் செய்த தீங்கை மறந்து இறைவனின் குணாதிசயத்தை நமதாக்கிக் கொள்வோம்.

**- தொடரும்......**

- J. **பாலசந்தர்**

# கடவுள் மனிதனைப் படைத்ததின் நோக்கம்

மனிதன் ஒரு இயந்திரம் போலல்லாமல் சுயாதீனமுள்ளவனாக இருக்கவே இறைவன் விரும்பினார். உங்கள் அனைவரையும் இயந்திரங்களாக மாற்றி அவருக்குக்கீழ்ப்படிய செய்திருக்க முடியும். ஒவ்வொருவனும் சுதந்திரமாகவும் சுய-விருப்பமுள்ளவனாகவும் இருக்கும்படி இறைவன் விரும்புகிறார். அவர்களிடத்தில் சுயம் இருந்தாலும், அவருடைய ஆவியால் நிரப்பப்படுவதற்காக, அவர்களுடைய சுயத்தை அவர்கள் ஒப்புவிக்கவேண்டும். அவர் உங்களை அடிமையாக்கமாட்டார். அவருடைய ஆவி அடிமைத்தனத்தின் ஆவி அல்ல. அவர் காணக்கூடாத கடவுளுடைய ஆவிக்கு அடிமையாக இருப்பார். அந்த அன்பிற்குரிய ஆவியானது, அன்பினிமித்தமாக உங்களை அடிமையாக்கும். இந்த உலகத்தில் நீங்கள் யாருக்கும் அடிமையாக இருக்கமாட்டீர்கள். அந்த 'பரிபூரணரைத்' தவிர, நாம் யாருக்கும் அடிமையாக இருக்கமாட்டோம்.

இறைவனிடத்தில் மாத்திரம்தான் அடிமைத்தனம் இல்லை. அங்கே உங்களுக்கு சுயாதீனம் இருக்கிறது. யாரையாவது அடிமையாக்குவதுதான் மனிதனுடைய வீழ்ச்சியடைந்த குணமாயிருக்கிறது. அவர்களுக்கு பணம் கிடைத்தவுடன், உங்களை அடிமையாக்கிக் கொள்வார்கள். பணம் இல்லாதவன் அடிமையாகி விடுகிறான். அவர்கள் 'காணிக்கை' என்று சொல்லி பணத்தை வசூலிக்கிறார்கள். 'காணிக்கை' மூலம் அவர்கள் எவ்வளவு அதிகமாக பணத்தைப் பெறுகிறார்களோ, அவ்வளவு அதிகமாக ஜனங்களை அடிமைகளாக்குவார்கள். இறைவனிடம் அடிமையாய் இருப்பதற்கு, நீங்கள் வெட்கப்படத் தேவையில்லை. ஆனால் மனிதனுக்கு அடிமையாய் இருப்பதுதான் பாவமாகும்.

உலகத்தில் இரண்டுபேர் சொல்வது சரியாக இருக்க முடியாது. அப்படி சொன்னால் அது ஒரு அற்புதமாக இருக்கும். அவர்கள் சரியாகத்தான் துவங்குவார்கள். பின்னர் சண்டை போடுவார்கள். இருவரில் ஒருவர் மற்றவனைக் காட்டிலும் பெரிய ஆளாக வேண்டுமென்று விரும்புவான். சரிசமமாக இருக்க அவர்கள் விரும்பமாட்டார்கள். ஒரு மனிதனுக்கு மகிமை வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். இன்னொருவன் தனக்கு கீழ் இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். இவன் தலைவனாக இருக்க விரும்புகிறான், மற்றவன் தனக்கு கீழ் இருக்க வேண்டும் என்று விரும்புகிறான்.

ஆனால் தேவன் தம்முடைய சொந்த சாயலில் நம்மை சிருஷ்டித்தார். ஆகையால் ஒவ்வொரு மனிதனிடமும் சத்தியம் இருக்க வேண்டும். நீங்கள் அதைத் தோண்டி எடுக்கும்பொழுது அது நம்மை விடுவிக்கிறது. அப்பொழுது நாம் துன்பப்படுகிற எல்லா காரியங்களிலிருந்தும் நாம் விடுவிக்கப்படுகிறோம். நாம் அடிமைகளைப்போல உட்கார பிறந்தவர்கள் அல்ல. நாம் இந்த மண்ணுக்கென்று பிறந்தவர்கள் அல்ல. நாம் கடவுளுடைய ராஜ்யத்திற்கென்று பிறந்தவர்கள்.

- ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா

**மன்னிக்காமல் மன அமைதி ஏற்படுகிறதில்லை. மன்னித்தல் என்பது அவ்வப்போது செய்யப்படும் செயல் அல்ல. ஆனால் அது ஒருவனின் நிரந்தரமான குணமாக வேண்டும்.**

**- மார்டின் லூதர் கிங்**

# வாசகர் குரல்

பேரன்புடையீர்,

வணக்கம். புஸ்தகம் கிடைத்தது. அதை படித்து மன மகிழ்ச்சியடைந்தேன். அதில் உள்ள ஒவ்வொரு கருத்தும் மிக அருமையாக உள்ளது. தொடர்ந்து நல்ல புஸ்தகங்களை அனுப்பி என்னை மேலும் மேலும் அறிவாளியாக்குகிறீர்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்கு தெரியவில்லை. விளம்பரம் இல்லாமல் அபூர்வ தகவல்கள் உள்ளன. நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றை படிப்பதினால் அதில் கருத்துகள் கிடைக்கின்றன. "விஷ்ணு சக்கரம்" மிக அருமையான கட்டுரை. அது மிக ஆழமாக அழைத்து செல்கிறது. எப்படி இதை தேடிக் கண்டுபிடித்து போடுகிறீர்கள். மிக்க நன்றி.

✍ **ஆர். சங்கர், வேலூர்**

நமது மனுஜோதி, 2012 நவம்பர் மாதம் காலாண்டு இதழ் கிடைக்கப் பெற்றேன். இந்த இதழ் மூலம் சந்திப்பு பெற்று பல பயனுள்ள தகவல்கள் கிடைக்கப் பெற்று, மன அமைதியும், நிம்மதியும் அடைந்து கொண்டு வருகிறேன். ✍ B. **கண்ணன், அந்தியூர்**

அன்புடையீர், நான் மனுஜோதி இதழை எனது நண்பர் கடையில் படித்து மிகவும் மகிழ்வடைந்தேன். இதழில் வரும் கருத்துக்கள், கட்டுரைகள் என்னை மிகவும் கவர்ந்து, நமது கொள்கையின்பால் ஈடுபாடு கொள்ள செய்தது. ஆகையால் இந்த இதழையும், மற்ற புஸ்தகங்களையும் எனது முகவரிக்கு அனுப்பி, எனக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

✍ **பாலகிருஷ்ணன், மேச்சேரி**

ஐயா, மனுஜோதி இதழ், இதழல்ல என் இதயம். 2012, நவம்பர் மாதம் வந்த மனுஜோதி இதழில் நல்லோர் தந்த கட்டுரைகள் அனைத்தும் நல் முத்துக்கள். என் சொத்துக்களாக பாவித்து, பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். அத்தனையும் நல்ல படிப்பினை நன்றி.✍ S. **முத்துசாமி தூத்துக்குடி**

வணக்கம். ஆன்மீகம், இறை அருள் பெற வழி காட்டும். ஆன்மீகப் பாதையானது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுவது ஆகும். உள்ளம் சொல்லும் வழியிலேயே வாழ்வு நடைபயணம் போடும். எனவேதான் உள்ளம் தூய்மை அடைய வேண்டும். உள்ளம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். இதயத்தில் சுத்தமுள்ளவன் பாக்கியவான். அவன் தேவனை தரிசிப்பான். ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா ஆன்மீக அன்பர்களுக்கு இறைவனை தரிசிக்க வழிகாட்டுதலாக உபதேசம் செய்தார். அதனை தற்போது மனுஜோதி வாயிலாக வழி காட்டப்படுகிறது. புத்தாண்டு புனித வாழ்க்கை பெற ஆசி வேண்டுகிறேன்.

✍ **தா. குமரேசன், நாகர்கோவில்**

தாங்கள் அனுப்பிய கதிர் 21 இதழ் கிடைக்கப் பெற்றேன். அனைத்து வேதங்களையும் இப்படி ஆய்வு செய்து இரத்தின சுருக்கமாக தாங்கள் கொடுத்த தகவல்கள் மிக சிறப்பு. இதை வாசிக்கும் உலக மக்களையும் விழிப்படையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

உண்மை "பணக்காரன்" யார் என்பதை தெரிந்துகொண்டேன். ஸ்ரீ கிருஷ்ணரது விஸ்வரூபம் எல்லாரையும் அழிக்க முடியும் என்பதையும், அனைத்து வேத நூல்களையும் ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா கொடுத்துள்ளார் என்பதையும் அறிந்துகொண்டேன். 'ஓம்' என்பதற்கு நான் இருக்கிறேன் என அர்த்தம் என கூறியுள்ளார்கள். மற்ற மத நூல் கருத்துக்களையும் எடுத்துக்காட்டி, 786–ன் விளக்கத்தை இந்த இதழின் மூலம் அறிய முடிந்தது. ஆபிரகாமை மற்ற மதத்தவர்கள் எப்படி அழைத்தார்கள் என்ற விளக்கம் பலரும் அறியும்படி இருந்தது. கட்டபொம்மன் இறை பற்றுடையவராக இருந்தார் எனவும் தெரிந்துகொண்டோம்.

சுவாமி பிரபுபாதா விலைமாதர் மூலம் அறிவுரை வழங்கியது உலகத்திற்கு ஓர் படிப்பினையாகும். மனுஜோதி இதழ் மூலம் மனம் தூய்மையுறும் என்பதில் எவ்வள வேனும் சந்தேகமில்லை. உலக சுற்றுப் பயணத்தின் மூலம் கற்ற அனுபவங்களைக் கொண்டு மக்களை விழிப்படையச் செய்த பாலாசீர் லாறி முத்துகிருஷ்ணா அவர்களுக்கு எனது நமஸ்காரங்கள்.

✍ D. **குப்புசாமி, செய்யார்**

# ஸ்ரீமத் பகவத்கீதை

ஆறாம் உபதேசம்

## ஆழ்நிலைதியானம் அல்லது அழிவற்ற யோகம் என்றால் என்ன?

TRANSCENDENTAL MEDITATION

துவாபர யுகத்திலே தியானத்திற்கான இடத்தின் குறிப்புகளைப்பற்றி கடவுள் தந்தருளினார்.

1. சுத்தமான இடம்,
2. ஆசனமானது அதிக உயர்வில்லாததும் அதிக தாழ்வில்லாததுமாக இருக்கவேண்டும்,
3. அந்த ஆசனத்தின்மேல் புல் அல்லது தோலினால் அல்லது வஸ்திரத்தினால் மூடப்பட்டிருக்க வேண்டும்,
4. அந்த ஆசனம் அசையாததும் சமமானதும் கரடு முரடற்றதாகவும் இருக்கவேண்டும்,
5. நீண்ட நேரத்திற்கு தியானம் செய்ய ஏற்றவாறு ஒரு சௌகரியமான நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்,
6. தன்னுடைய ஐம்புலன்களையும் அவன் அடக்கவேண்டும்,
7. வெளி உலகிலிருந்து தன்னுடைய மனதை இழுத்துக்கொள்ள வேண்டும்.

உடல், தலை, கழுத்து இவற்றை ஒரே ஒழுங்காகவும் அசையாமலும் நிறுத்தி ஸ்திரமாய் இருந்து தன்னுடைய மூக்கு நுனியை உற்றுநோக்கி ஒரு திசையும் பாராமல் அலையாத மனத்தினனாய் அச்சம் ஒழிந்தவனாய் பிரம்மச்சரிய விரதத்தில் நிலைபெற்றவனாய் மனத்தை அடக்கி என்னையே சிந்தித்து என்னையே இலக்காய்க் கொண்டு சமநிலையுள்ளவனாக இருக்கவேண்டும்.

மேற்கூறிய பயிற்சியானது மனதை தூய்மைப்படுத்தவே உபயோகப்படுகிறது, சாகாமையை அடைவதற்கு அல்ல. இவ்வாறு எப்போதும் பரமாத்மாமீது தன்னுடைய மனத்தை வைத்து தியானிப்பவன், என்னை நோக்கியே ஒருமுகப்பட்டிருப்பவன், என்னுள் அடங்கியிருக்கும் மகத்தான பொருள் அடங்கிய நித்திய சமாதானத்தை அடைகிறான்.

இந்த தியானப் பயிற்சியானது அதிகமாய் உண்பவனுக்கும், ஒன்றும் உண்ணாதவனுக்கும், தூக்கத்தில் அதிக விருப்புடையவனுக்கும், தூங்காமலே விழிப்பவனுக்கும் உகந்ததல்ல.

மிதமான உணவும், இளைப்பாறுதலும் உடையவனுக்கும், செயல்களில் மிதமான உழைப்புடையவனுக்கும், மிதமான உறக்கமும் விழிப்பும் உடையவனுக்கும் இந்த வகையான யோகா அல்லது தியான பயிற்சியானது அவனுடைய மனதின் எல்லா வலியையும் துயரங்களையும் அழித்துவிடுகிறது.

மற்றவர்களைப் பற்றி அறிந்து கொள்வது ஞானமாகும். ஒருவன் தன்னைத்தான் அறிந்து கொண்டால் அதுவே ஞானோதயமாகும்.

**- தாவ் தே சிங்** (Tao Te Ching)

# சங்கைமிக்க குர்-ஆன்

### அல்லாஹ் வெளியரங்கமான சத்தியமானவர்

### ஸூரா-24

**வச.25:** அந்நாளில் அவர்களுக்குரிய செயல்களுக்கு உண்மையான கூலியை அல்லாஹ் அவர்களுக்குப் பூரணமாகக் கொடுப்பான்; நிச்சயமாக அல்லாஹ் – அவனே கணக்குகளை நீதமாக வைத்து அவற்றை வெளியாக்கி விடக்கூடிய உண்மையாளன் என்பதை அவர்கள் அறிந்தும் கொள்வார்கள்.

### அல்லாஹ் சாட்சியாக விளங்குகிறார்

### ஸூரா-3

**வச.81:** மேலும், அல்லாஹ் நபிமார்களிடம்: வாக்குறுதி வாங்கிய சமயத்தில், அவர்களிடம், "வேதத்தையும், ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுத்து, இதற்குப் பின்னர், உங்களிடம் உள்ளதை உண்மைப்படுத்தும் ஒரு தூதர் உங்களிடம் வந்தால், அவரை நீங்கள் உண்மையாக விசுவாசித்து, நிச்சயமாக அவருக்கு உதவி செய்வீர்கள் என்று கூறி, "இதனை நீங்களும் உறுதிப்படுத்தினீர்களா ? இதன்மீது என்னுடைய வாக்குறுதியை எடுத்துக் கொண்டீர்களா ?" என்று கேட்டதற்கு, அவர்கள் "நாங்கள் அதனை உறுதிப்படுத்துகிறோம்" என்றே கூறினார்கள். "இதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்; நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் உள்ளவனாக இருக்கின்றேன்" என்று கூறினான்.

### ஸூரா-10

**வச.29:** "ஆகவே, எங்களுக்கும் உங்களுக்குமிடையில் அல்லாஹ்வே சாட்சியாக இருக்கப் போதுமானவன்; உங்கள் வணக்கத்தைப்பற்றி நிச்சயமாக, நாங்கள் அறியாதவர்களாக இருந்தோம்" என்றும் கூறுவர்.

Form IV Rule - 8

**MANUJOTHI**

[redacted]

**'பாரதம்' என்ற பெயர் ஏற்பட காரணம் :** 'பா' என்றால் ஒளி. 'ரதம்' என்றால் விருப்பம். ஒளியின்மேல் விருப்பமுள்ளவர்கள் பாரத நாட்டினர் எனப்படுவர்.

# இறைவனிடம் சரணாகதி அடைந்து மேலான சேவை செய்யுங்கள்

சரணாகதி என்றால் இறைவனை மட்டுமே தஞ்சமாக அடைவதாகும். தனக்குண்டான எல்லா வழியிலும் தன் பிரச்சினைக்கு தீர்வு காண நேர்ந்து இறுதியில் இறைவன் ஒருவனே தன் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று, அவனிடம் மனிதர்கள் சரணடைகிறார்கள். இத்தகைய சரணாகதிக்கு நம் மனநிலை மாற வேண்டுமெனில், பயங்கரமான நெருக்கடி அல்லது நம்பிக்கையற்ற சூழ்நிலை உருவாக வேண்டும். சரணாகதியை பற்றிச் சொல்லும்போது நமக்கு உடனடியாக நினைவில் வருவது கஜேந்திர மோக்ஷம். குளத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, யானைகளின் ராஜா, ஒரு முதலையிடம் சிக்கிக் கொள்கிறது. பலமுறை முதலையின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சி செய்த போதிலும் ஒன்றும் நடக்கவில்லை. இறுதியில் ஆதிமூலமே என்று சரணடைந்து இறைவனை அழைத்தபோது ஸ்ரீமந் நாராயணர் காப்பாற்றினார். இதற்கொத்த உதாரணம் திரௌபதியின் வஸ்திரஹரணமாகும்.

முதலில் அவள் தன் வீரக் கணவன்மார்களை உதவிக்கு அழைத்தாள். விதிக்குக் கட்டுப்பட்டிருந்த அவர்கள் செயலிழந்து சிலையாய் இருந்தார்கள். பீஷ்மர், துரோணர் போன்றோரை அழைத்துப் பார்த்தாள். அவர்களாலும் உதவ முடியவில்லை. 'என்னை நானே காத்துக்கொள்வேன்' என்று கைகளால் தன் மேனியை மறைத்தாள். மடையன் துச்சாதனன் விடுவதாக இல்லை. முடிவில் இனி யாரும் என்னைக் காப்பாற்ற முடியாது. நானும் என்னைக் காப்பாற்றிக்கொள்ள இயலாது என்பதை உணர்ந்தாள் திரௌபதி. மனிதர்களின் சக்தியற்ற தன்மை அவளுக்குச் சரியாகப் புரிந்தது. 'பேரரசி, பாண்டவர் பத்தினி' போன்ற அவளது அபிமானங்கள் சிதைந்தன. அகங்காரம், துறவு மேற்கொண்டது. ஆண்டவன் உறவு மேம்பட்டது. 'ஆஷா ஹி பரமம் துக்கம்' எதிர்பார்ப்பே எல்லா துக்கங்களுக்கும் காரணம் என்பதை உணர்ந்தாள். கதறியவள் கண் மூடினாள். கண்டாள் நித்திய நேசனை நெஞ்சில்! கோவிந்தா! நீ மட்டுமே என்னைக் காக்க முடியும் என்று அவள் சரணாகதி அடைந்ததால் காப்பாற்றப்பட்டாள். இறைவனை அடைய நாம் ஏன் சரணாகதி அடைய வேண்டும்? ஒரு கோப்பையில் பாலை ஊற்ற வேண்டுமென்றால், கோப்பை காலியாக இருக்க வேண்டும். அதைப்போலவே இறைவனை நாம் அடைய வேண்டுமென்றால், நம் மனதை வெறுமையாக்க வேண்டும் அல்லது ஒரு கோப்பையைப் போல காலியாக இருக்க வேண்டும். சரணாகதிக்கு தடையாக இருப்பது மூன்று காரியங்கள். 1. செல்வம் 2. குடும்ப பந்தம் 3. 'நான்' என்ற அகம்பாவம். துறவறத்தை மேற்கொள்ளுகிறவர்கள் இம்மூன்றையும் துறக்க வேண்டும் என்று எல்லா வேதங்களும், ஞானிகளும் கூறுகின்றனர். எல்லாவற்றையும் விட்டு விட்டு இறைவனைப் பின்பற்ற வேண்டும்.

முதலாவதாக பொருள் அல்லது தன்னுடைய செல்வத்தை அல்லது ஆஸ்தியை துறக்க வேண்டும். ஆஸ்தியை துறப்பதால் ஒருபோதும் இறைவனின் சாட்சியைப்பெற முடியாது. ஒரு மண்பாணையில் எண்ணெயை ஊற்றி வைத்திருந்து, பிறகு அந்த எண்ணெயைக் கீழே ஊற்றிய பிறகும் நீண்ட நாட்கள் மண்பானை அதை உறிஞ்சி வைத்திருக்கும். ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா கூறும் விளக்கமானது: ஒருவன் செல்வத்தை விட்டு விட்டேன் என்று சொல்லுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு உண்மையிலேயே செல்வத்தின் மீது பற்றானது போய்விட்டதா என்று சோதித்தறிய, இறைவன் அவனுக்கு மீண்டும் பொருளையோ,

பணத்தையோ கொடுக்கிறார். அப்பொழுதும் அவன் அதை தனக்கென்று எடுத்துக்கொள்ளாமல் இருந்தால், அவனிடம் செல்வத்தின்மீது பற்று இல்லை என்பது நிரூபிக்கப்படுகிறது.

இடைவிடாத பயிற்சியால்தான் செல்வத்தை விட முடியுமே தவிர, புறத்துறவினால் மட்டும் இறைநிலையை அடைந்துவிட முடியாது என்பதை விவிலியத்தில் கூறப்பட்டுள்ள ஒரு சம்பவம் விளக்குகிறது.

எலிசா என்ற தீர்க்கதரிசிக்கு, கேயாசி என்பவன் பணிவிடை செய்து வந்தான். அண்டை நாடாகிய சீரியா ராஜாவின் படைத்தளபதியாகிய நாகமான் என்பவன், எலிசா என்ற தீர்க்கதரிசியிடம் குஷ்டரோகம் நீங்கப் பெற்றான். காணிக்கையாக பொன், பொருள், இரத்தினங்களை வழங்கினான். அவற்றையெல்லாம் எலிசா தீர்க்கதரிசி வாங்க மறுத்துவிட்டான். அவனுடைய பணிவிடைக்காரன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். நாகமான் சிறிது தூரம் சென்ற பின்னர், கேயாசி அவனிடம் சென்று பொன்னையும், ஆபரணங்களையும், விலையுயர்ந்த உடைகளையும் பெற்றுக் கொண்டான். பாருங்கள்! எல்லாவற்றையும் துறந்த தீர்க்கதரிசியின் கூடவே இருந்தும், செல்வத்தின் மீது அவனுக்குப் பற்றானது போகவில்லை. அவன் செல்வத்தை துறந்தவன்போல காட்சியளித்தாலும், மனதளவில் அவனுக்கு செல்வத்தை சேர்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதன் விளைவு எலிசா ஞான திருஷ்டியினால் அறிந்துகொண்டு கேயாசிக்கு சாபமிட்டான். நாகமானின் குஷ்டரோகம் கேயாசியை பற்றிக்கொண்டது. கேயாசி புறத்துறவினால் மனதளவில் துறவு மேற்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட பரிசோதனை ஸ்ரீராம கிருஷ்ணர் வாழ்க்கையில் ஏற்பட்டது.

ஒருவர் ஸ்ரீராம கிருஷ்ணரிடம் பெரும் பணம் கொடுக்க வந்தார். அதைப் பெற மறுத்துவிட்டார் குருதேவர். அவரும் விடுவதாக இல்லை. கடைசியில் நீங்கள் நீருடன் எண்ணெய் சேராததுபோல, சிறிதும் உலகப் பற்று இல்லாதவர். ஆகவே செல்வதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார். ஸ்ரீராம கிருஷ்ணரோ, எண்ணெயும், நீரும்சேராவிட்டாலும், நீண்ட நாட்கள் ஒன்றாக இருந்தால் இரண்டுமே கெட்டுவிடும் என்று கூறி அவரை அனுப்பிவிட்டார். இதுதான் எடுத்துக் கொண்ட பாதையில் இருக்க வேண்டிய உறுதி. ஆகவே சரணாகதி அடைய ஒருவன் முதலில் செல்வத்தின் மேலுள்ள பற்றைத் துறக்க வேண்டும்.

அடுத்ததாக துறக்க வேண்டியது குடும்ப பற்று. இல்லறத்தான் தனக்குரிய எல்லாக் கடமைகளையும் சரிவரச் செய்ய வேண்டும். அதேசமயம், உள்ளத்தை இறைவனிடம் செலுத்த வேண்டும். தன் மனைவி, குழந்தைகள், பெற்றோர் இவர்களோடு வாழ்ந்து, இவர்களெல்லாம் எனக்கு மிகவும் வேண்டியவர்கள் என்ற நினைப்பில் அவர்களது தேவைகளை நிறைவேற்றத்தான் வேண்டும். அதேசமயம் இவர்கள் யாரும் எனக்கு நெருங்கிய உறவினர்கள் அல்ல. இறைவன் மட்டுமே எனக்கு உண்மையான சொந்தம் என்பதையும் தெளிவாகப் புரிந்து வைத்திருக்க வேண்டும்.

பணக்கார வீட்டு வேலைக்காரி ஒருவள், எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தாலும், அவள் மனம் எப்போதும் கிராமத்திலுள்ள தன் வீட்டையும் குழந்தைகளையுமே நினைத்துக் கொண்டிருக்கும். அவள் எஜமானனின் பிள்ளைகளைத் தன் குழந்தை போலவே கவனித்து, என் ராமன், என் ஹரி என்றெல்லாம் கூறுவாள். ஆனாலும் அக்குழந்தைகளுக்கும், தனக்கும் எந்த உறவுமில்லை என்பது அவளுக்கு நன்றாகவே தெரியும்.

ஆமை நீரில் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தாலும் அதன் மனமெல்லாம் கரையில், தான் இட்ட முட்டைகளின்மீதே இருக்கும். அதுபோலவே, இல்லறத்தில் இருந்தாலும் மனதை ஈசுவரனிடத்தில் மட்டுமே நிறுத்தி வைக்க வேண்டும். பலாப்பழத்தை அறுக்க முயல்பவன், தன் கைகளில் எண்ணெயைத் தடவிக் கொள்வான். இல்லாவிட்டால் பழத்தின் பிசின் கைகளில் ஒட்டிக்கொண்டுவிடும். அதுபோல, இல்லறத்தில் இருப்பவன், கடவுள் பக்தி என்ற எண்ணெயைப் பூசிக்கொள்ள வேண்டும்.

“நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும், அங்கே உங்கள் தந்தை வயதுடையவர்களுக்கு மரியாதை கொடுத்து, அவர்களிடம் சிறிது நேரம் செலவழியுங்கள். வயதான பெண்மணிகளை உங்கள் தாய் என்று எண்ணி பராமரியுங்கள். அண்ணன், அக்கா வயதுடையவர்களை, உங்கள் அண்ணன், அக்காள் என்று நினைத்து உதவி செய்யுங்கள். உங்கள் மகன் அல்லது உங்கள் மகள் வயதுள்ள பிள்ளைகளுக்கு புத்திமதி கூறி அன்பு காண்பியுங்கள். அப்பொழுது வெகு தொலைவில் உள்ள உங்கள் பிள்ளைகளுக்கு வேறு யாரோ ஒருவர் அன்பு செய்வார்கள். இப்படி செய்தால் இறைவன் உங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பார்”. இப்படி செய்யும்போது குடும்ப பந்தம் அற்றுப்போகிறது. சரணாகதி அடைவதற்கு குடும்பத்தின் மேலுள்ள பற்றை விட்டு விடுதல் அவசியமாகும்.

ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா இறைவனைச் சார்ந்து வாழுங்கள் என்றுகூறினார். சூரியன், சந்திரன், ஒன்பது கிரஹங்களும் தாமாகவே சுழல்கின்றன. அவை எதன்மீதும் சார்ந்திருக்கவில்லை. இறைவன் ஒருவனையே அவை சார்ந்திருக்கின்றன. மனிதனும் மனிதர்மேலோ, பொருள் மேலோ சார்ந்திருக்காமல் இறைவன்மேல் சார்ந்திருக்க வேண்டும். அப்பொழுது இறைவன் நம்மை இயக்குவார். உண்மையான பந்தம் எது என்று இயேசுபிரான் கூறுகிறார். இறைவனுடைய திட்டத்தை செய்பவர்களே நம்முடைய குடும்பத்தார் என்றார். ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா கூறும் விளக்கமாவது: நமக்கு இந்தப் பூமியில் இரத்தத்தினால் ஏற்பட்ட பந்தம் உண்டாயிருக்கிறது. ஆனால் தெய்வீக அன்பினால் ஏற்படுகின்ற பந்தமே நிலையானது. என் குடும்பம் என்ற எண்ணத்தை துறந்தால் தான் நாம் இறைவனுடைய வீட்டார் அல்லது இறைவனுடைய குடும்பத்தில் ஒரு பாகமாக முடியும். இறைவனுடைய குடும்பம் என்பது என்ன? இறைவன் ராஜா அவருக்குள் பாகமாகி இருப்பவர்கள் ராணியாக விளங்குகிறார்கள். ராணிக்கு தோழிகள், பணிப் பெண்கள் இருக்கிறார்கள். ராஜாவுக்கு சிநேகிதர்கள், தோழர்கள், பணிவிடைக்காரர்கள் இருக்கிறார்கள். இந்த ராஜரீக குடும்பத்தில் நம்மை இணைத்துக்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக ‘நான்’ என்ற எண்ணத்தை துறப்பதற்கு மிகவும் கடினமானது. இதை ஸ்ரீமந் நராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா ‘சுயம்’ என்று அழைக்கிறார். ஒருவன் செல்வத்தையும், பற்றையும், பந்தத்தையும் விட்டதாக கூறினாலும், அவன் சுயத்தை விட்டிருக்கமாட்டான். ‘சுயம்’ என்பது மிகவும் சூட்சமமாக மறைந்திருக்கும். முதலில் அது இருக்கிறதா என்று கண்டுபிடிக்க வேண்டும். “சுயம்” என்பது “ego” என்று இக்காலத்தில் வழங்கப்படும் சொல்லாகும்.

ஒரு ஆன்மீகவாதி சுயநலமில்லாமல் பல காரியங்களைச் செய்யலாம். ஆனால் ‘நான் செய்தேன்’ என்று அவன் நினைத்தால், அவன் இன்னும் சுயத்தை விடவில்லை என்று அர்த்தமாகும். ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் நீ இறைவனுடைய

கையில் ஒரு கருவியாக இருக்கிறாய். நீ ஒன்றும் செய்யவில்லை. உன்னை செலுத்துபவன் இறைவன் என்று கூறுகிறார். நமது செயல்களிலே அகங்காரம் அல்லது 'நான்' என்ற எண்ணம் குறுக்கிடும் போதெல்லாம் தவறு நேர்ந்துவிடுகிறது. ஆன்மீகம் தடைபடுகிறது. எனவே "நான் செய்கிறேன்" என்கிற உணர்வை விடுத்து இறைவன் கையில் நாம் கருவியாக, தம் பணியை நிறைவேற்றிக் கொள்கிறேன். அதற்கு நான் கருவியாக இருக்கிறேன் என்ற உணர்வோடு கடமையைச் செய்ய வேண்டும். இந்த உணர்வு மேலோங்கினால், உயிர்கள் அனைத்துமே இறைவன் கையில் கருவிகள் என்பதனாலே, ஒருவர் நலன் கருதி செய்தால் அவர் மீது விருப்பு வராது, இன்னொருவர் கேடு செய்தால் அவர்மீது வெறுப்பு வராது.

ஸ்ரீமந் நாராயணா ஸ்ரீ லஹரி கிருஷ்ணா 'நான்' என்பதற்கு மனிதனுடைய சிந்தை என்று விளக்கம் தருகிறார். ஒருவன் இறைவனுக்காக கர்மயோகியாக தன்னுடைய சொந்த மனித புத்தியை அல்லது மனித சிந்தையை உபயோகிக்கக்கூடாது. இறை சிந்தையை செயல்படுத்த வேண்டுமென்றால் அவன் தனது புத்தி அல்லது சிந்தை சொல்வதின்படி செய்யக்கூடாது. ஒரு இயந்திரத்தைப் போலாகி விட வேண்டும். அல்லது காலியான கோப்பையைப் போலாகிவிட வேண்டும். அப்பொழுது அப்படிப்பட்ட மனிதனை தம்முடைய வேலையைச் செய்ய உபயோகித்துக் கொள்வார்.

குருக்ஷேத்திரத்திலே கீதா உபதேசத்தை கேட்ட பின்னரும் ரதத்தை விட்டு இறங்கு என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னபோது நீர் ரதசாரதி, நீர் முதலில் இறங்க வேண்டும். அதன்பின்னர் தான் நான் இறங்க வேண்டும் என்று அர்ஜுனன் கூறினான். அவன் கீதா உபதேசத்தைக் கேட்ட பின்னரும் அவனுடைய சுய சிந்தை அழியவில்லை என்பதை நாம் அறிகின்றோம்.

வஸ்திரஹரணத்திற்குப் பிறகு வாழ்வில் முக்கியமான சமயத்திலும், அறுதி வெற்றியிலும் ஆண்டவன் மட்டுமே துணை புரிவார் என்பதை திரௌபதி உணர்ந்தாள். இந்த மனநிலை கூடிய பிறகு, திரௌபதி உலகைத் துறந்து வனத்திற்கு ஓடி விடவில்லை. கணவன்மார்களை ஒதுக்கவில்லை. அவர்கள் தன்னைக் காக்க முடியாத கையாலாகாதவர்கள் என வார்த்தைகளால் சுடவில்லை. திரௌபதியின் நம்பிக்கை ஆதாரம், வாழ்வதற்கான உணர்வு இரண்டும் ஸ்ரீ கிருஷ்ணரை நோக்கியே இருந்தன. எப்போதும்போல் பாண்டவர்களுக்கு அவள் எல்லாப் பணிகளும் செய்தாள். சிரித்தாள், சிரிக்க வைத்தாள். அழுதாள், அடுத்தவர் கண்ணீரையும் துடைத்தாள். ஆனால் அவளது அடிமனதில் ஸ்ரீ கிருஷ்ணர் மட்டுமே தனக்கு நிரந்தரப் பாதுகாப்பு தர முடியும் என்பதையும் உணர்ந்திருந்தாள். 'கோவிந்தா, உன் பக்தர்களை நீ கைவிடுவதில்லை என்ற உன் உறுதிமொழியைத் திரும்பத் திரும்ப நினைத்து நான் உயிர் வாழ்கிறேன் என்றாள்.

இப்படிப்பட்ட திரௌபதியின் மனநிலை 'சுயம்', 'அகம்பாவம்' அல்லது சுய சிந்தை ஒழிந்த நிலையாக இருக்கின்றது.

மனித சிந்தையை படிப்படியாகத்தான் ஒழிக்க நேரிடும். அது அப்பியாசத்தினால் தான் சாத்தியமாகும். ஒரு ஆன்மீகவாதி தன் சுய சிந்தையை உபயோகிக்காமல் இறைவனுடைய சிந்தையை மட்டும் செய்கிறவனாக திகழ்ந்தால், அவனே கர்மயோகி என்று அழைக்கப்படுகிறான். இப்படிப்பட்டவன் சரணாகதி அடைந்து விட்டவனாகத் திகழ்கிறான்.

# அன்றும் இன்றும்

**அ**ல்லேலூயா தெரியும்; ஆனால் அன்புக் கொடி தெரியாது!

**ஆ** லயம் தெரியும்; ஆனால் ஆதிபலி தெரியாது !

**இ** யேசு தெரியும்; ஆனால் இறங்கிய தேவன் தெரியாது!

**ஈ** ஸ்டர் தெரியும்; ஆனால் ஈசாயின் அடிமரம் தெரியாது !

**உ** லகம் தெரியும்; ஆனால் உடன்படிக்கை தெரியாது!

**ஊ**ர் மக்கள் தெரியும்;
ஆனால் "**ஊர்**" பெயரின் ரகசியம் தெரியாது!

**எ** ன் சபை (C.S.I) தெரியும்; ஆனால் ஏன் தேவன் தெரியாது!

**ஏ** ளனம் தெரியும்; ஆனால் ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் யாரென தெரியாது!

**ஐ** யர் (பாதிரியார்) தெரியும்; ஆனால் அய்யா (ஸ்ரீ லஹரி கிருஷ்ணா) தெரியாது!

**ஒ** ன்றல்ல மூன்று என தெரியும்; ஆனால் மூன்றல்ல ஒன்று என தெரியாது!

**ஓ** ய்வு நாள் ஞாயிறு என தெரியும்; ஆனால் சனி என தெரியாது !

**ஔ** டதம் இயேசு என தெரியும்; ஆனால் அவர்தான் நம் கிறிஸ்து இயேசு என தெரியாது!

இக்குருடனின் கண்களைத் திறந்த அய்யாவைப் போற்றுகிறேன்; நாள்தோறும் வணங்குகிறேன்.

ஸ்ரீ லஹரி கிருஷ்ணா நாமம் வாழ்க! என என்றும் வாழ்த்தும் அன்பன்

**ராஜசேகர்,**
தூத்துக்குடி

நல்லதை படிக்கனும் – அதை நாளும் படிக்கனும்
படித்ததை மனதில் கொண்டு அதன்வழி நடக்கனும்
அப்படி நடந்தாலே நல் வாழ்வு கிடைத்து விடும்
நன்மைகள் பெருகி விடும் வேதனைகள் மறைந்து விடும்

வாழ்வில் வெற்றிகள் கிடைத்து விடும் சந்தோஷம் கிடைத்து விடும்
மனுஜோதி இதனை படித்தாலே சகல பாக்கியங்களும் கூடி வரும்
நல்லோர் ஆசியெல்லாம் நமக்கு கிடைத்து விடும்
ஸ்ரீமந் நாராயணர் துணை ஸ்ரீ லஹரி கிருஷ்ணா துணை

S. **முத்துசாமி,**
தூத்துக்குடி

**லஹரி லஹரி லஹரி கிருஷ்ணாவை போற்றுவோம்!
தினமும் காலை எழுந்தவுடன் லஹரி கிருஷ்ணாவை பாடுவோம்!
காலையும் மாலையும் ஜெப நாமம் பாடுவோம்!
காணும் பொருள்களிலும் லஹரி கிருஷ்ணாவை பார்க்கிறோம்!**

**எல்லா ஊர் மக்களும் வந்து போகும் இடமே
வாழையாக வாழையாக வளர்ந்து வரும் ஆசிரமம்!
வந்தோர் அனைவரும் மன மகிழ்வை பெறுகிறோம்!
சாதி மதம் பார்ப்பதில்லை, சண்டை சச்சரவு இருப்பதில்லை;
ஒன்று எங்கள் ஜாதியே என்றுதானே வாழ்கிறோம்!**

**அன்பு மழை பொழியுது அகில உலகிலே ஐயா உந்தன் கருணையால்
மண்ணில் பிறக்கையில் கடவுள் ஒருவர் இருக்கிறார்!
கருணை உள்ளம் படைக்கிறார் லஹரி கிருஷ்ணா இருக்கிறார்!
நாடே போற்றி துதிக்கிறோம்; உலகம் சுற்றி பார்த்தாலும்
உண்மை இதுதான் பாருங்களே! மதங்களின் போதனையை
படித்தாலும் லஹரி கிருஷ்ணா இருக்கிறார்!**

**பழனிசாமி,**
கரூர்

அகத்தில் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவைத் துதித்திட வேண்டும்
அன்பரெல்லாம் மனுஜோதிக்கு வந்து சென்றிட வேண்டும்!
முகத்தில் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா தெரிந்திட வேண்டும்!
மூதறிஞர் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்திட வேண்டும்!

இறவாத பேரின்ப நிலை பெற்றிட வேண்டும்!
எல்லோரும் ஓரினம் என எண்ணிட வேண்டும்!
அறந் தவறாத நிலையை அறிந்திட வேண்டும்!
அகிலத்திரட்டு நூலைக் கற்றிட வேண்டும்!

உத்தமர்களோடு உறவு நாடிட வேண்டும்!
ஒன்றே குலமென்று மக்கள் வாழ்ந் திட வேண்டும்
முத்தான ஸ்ரீ லஹரி அய்யாவைத் தொழுதிட வேண்டும்!
மூடப் பழக்கத்தை அகற்றி வாழ்ந்திடவேண்டும்!

**புலவர் திருக்குறள் இரா. நடராசன்,**
தென்காசி

நாராயணா நமோ நாராயணா இவர் கல்கி மகா அவதாரம்
அர்த்தநாரீஸ்வரரே! அய்யா லஹரி கிருஷ்ணாவே!

நாத்தானின் கோத்திரமே! பாராயணம் பாடுவோமே!
தாவீதின் சங்கீதத்தால், ஆனந்த கூத்தாடுவோம்!

கலியுகக் கண்ணனைக் கரம் கூப்பி துதிக்காமல்
கண்டதெல்லாம் தெய்வமெனக் கையெடுப்பார் சண்டாளர்!

வடகலையா! தென்கலையா! எந்த வழி சிறந்தது?
ஆதி நாராயணன் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா காட்டும் வழி சிறந்தது!

அரியென்றும், சிவமென்றும் இரண்டென்பார் அறிவிலார்!
அன்பே உருவான அய்யா ஜாடை காட்டி அழைக்கிறார்!

**இஸ்ரவேல்,** பண்ருட்டி

**ஒன்றே நம் குலம் ஒருவனே தேவன்
என்றும் அன்பை ஏற்போம் கொடியாய்
எம்மத விளக்கமும் இனிதே உணர்ந்து
சம்மதம் காட்டி சமத்துவம் வளர்ப்போம்
படைப்பின் ரகசியம் பரமன் பெருமை
கிடைத்த வாழ்வில் கற்போம் அதனை
சமய நூல்களில் சத்தியம் தேடும்
இமயம் போன்ற எங்கள் "லஹரி"
நாராயணரின் நல்லவதாரம்
வாராய் வந்தவன் வரத்தைப் பெறுவாய்
துன்பம் நீங்கும் துயரம் அகலும்
அன்பில் மகிழும் அகிலம் தானே!**

**இரா. முத்துஸ்வாமிஜி,** பூதப்பாண்டி

# ஆன்மீகப் பார்வையில் திருக்குறள்

**தம்பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்**
**தம்தம் வினையான் வரும்.**

புகழிலே மிகச் சிறந்த புகழ் மரணமில்லா பெருவாழ்வு ஆகும். இத்தகைய சிறப்பை யாராவது பெற்றார்களா? ஆம்! ஒருவன் பெற்றான்.

காவிரி ஆற்றின் தென்கரையில் ஒரு தபோவனம் இருந்தது. அந்த தபோவனத்தில் ஓர் தவசியும் அவரின் துணைவியாரும் வாழ்ந்து வந்தனர். இருவரும் உலகம் நன்மை அடைய வேள்விகளும், சிவ பூஜையும் செய்து வருவதை தம் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வந்தனர். தமக்குப் பின்பு இந்த புனித தொண்டினை செய்வதற்கு நமக்கு ஒரு புதல்வன் இல்லையே என்று ஏங்கினர்.

ஒருநாள் நாரத முனிவர் அந்த தபோவனத்திற்கு வர, தவசி தனது மனக்குறையை அவரிடம் கூறினார். உடனேநாரதர், உலக மேன்மைக்கு தவம் மேற்கொள்ளும் நீங்கள் உங்களுக்காக ஏன் இறைவனிடம் வேண்டிக்கொள்ளக் கூடாது? இப்பொழுதே நீங்கள் இருவரும் தொடர்ந்து சிவனிடம் புத்திர பாக்கியம் கேட்டு, வணங்குங்கள் என்று கூறிச் சென்றார். நாரதரின் யோசனையைக் கேட்டு தவசியும், முனிபத்தினியும் சிவனை இடைவிடாமல் பிள்ளைப் பேற்றுக்காக வழிபட்டனர்.

இறைவன்மனம் குளிர்ந்து, தவசியே! உமது வேண்டுதலுக்கு இணங்க புத்திர பாக்கியம் அளிக்கிறோம். ஆனால் உனது எண்ணப்படி நீண்டநாள் வாழ்வு உடைய புதல்வன் பிறந்தால் அவன் அறிவு வளம் குன்றி இருப்பான். நல்ல அறிவுள்ள மகனோ தங்களுக்கு பதினாறு வயதுவரை மட்டுமே உதவுவான். பின்பு விதியின் கணக்கு அவன் வாழ்வில் முடிவு பெற்றுவிடும். எனவே தவசியே! தங்களின் உள்ளக் கருத்துக்கு ஒப்ப ஓர் வரம் அளிக்க காத்து நிற்கிறேன் என்று சிவபெருமான் காட்சி அளித்துக் கூறினார்.

எம்பெருமானே! இது என்ன சோதனை? நீண்ட நாட்கள் வாழ்ந்து அறிவற்ற பிள்ளையால் என்ன நன்மை இருக்கிறது? குறைவான ஆயுளுடன் இருப்பினும் அறிவுடைய பிள்ளையைத் தானே உலகம் விரும்பும் என்று வருத்தத்துடன் தவசியும் அவரது மனைவியும் கூறினர். அவ்வாறு நிகழட்டும் என்று கூறி சிவபெருமான் மறைந்து சென்றார்.

இறைவனின் வரத்தால் மகன் பிறக்க அவனுக்கு மார்க்கண்டேயன் என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தனர். மார்க்கண்டேயன் வளர்ந்து சிவ பூஜை நடத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டு நந்தவனத்தில் பூ பறித்தல், பூச்செடிகளுக்கு நீருற்றி பாதுகாப்பது போன்ற கடமைகளைப் புரிந்து வந்தான். மேலும், தனது தந்தையிடமே வேதங்களையும், மற்ற கல்விகளையும் கற்று மேன்மை பெற்றான். மார்க்கண்டேயன் இவ்வாறு தனது பணிகளை சிறப்போடு செய்து வர, காலங்கள் கடந்து அவனுக்கு பதினைந்து வயது முடியும் தருவாய் வந்தது.

அதை அறிந்து தவசியும் அவரது மனைவியும் கவலை கொண்டு வாடிய முகத்துடன் இருந்தனர். அதனைத் தெரிந்துகொண்ட மார்க்கண்டேயன் தங்கள் வருத்தத்திற்கு காரணம் என்ன? என்று கேட்டான். உடனே உனக்கு பதினாறு வயதுவரை தான் இறைவன் ஆயுள்காலம் வழங்கியுள்ளார். இப்பொழுது பதினைந்து வயது நிறைவு பெறப் போகிறது என்று துயரத்துடன் கூறினார்கள். அறிவில் சிறந்த மார்க்கண்டேயன் இதனைக் கேட்டதும் துன்பம் கொள்ளவில்லை. உன்னுடைய பிரிவிற்காக மட்டும் நாங்கள் வருந்தவில்லை. எங்களுக்குப் பிறகு இவ்வுலகம் நெறியோடு இருக்க நீ சேவை புரிவாய் என்று எண்ணியே சிவனிடம் பிள்ளை வரம் கேட்டோம் என்றார்கள் அன்பு பெற்றோர்கள்.

அப்பொழுது எதிர்பாரத விதமாக நாரத முனிவர் அங்கு வந்தார். அவர்களிடம்: "கேட்டவர்களுக்கு கேட்ட வரம் தருபவர் அந்த சிவபெருமான்.நீங்கள் பிள்ளை வரம் கேட்டீர்கள்; பிள்ளை வரம் தந்தார். மார்க்கண்டேயன் நீண்ட வாழ்வு

பெற மார்க்கண்டேயனையே சிவனிடம் வேண்டிக்கொள்ளும்படி கூறிப்பாருங்கள். பிரார்த்தனை பலன் அளிக்கும் அல்லவா?" என்று கூறிச் சென்றார்.

அன்றுமுதல் ஆயுள் காலத்திற்காக சிவனை நோக்கி தவம் புரிந்தான் மார்க்கண்டேயன். நாட்கள் நகர நகர எமதர்மன் தனது தூதர்களை அனுப்பி மார்க்கண்டேயன் உயிரை கவர்ந்து வருமாறு கூறினான். மார்க்கண்டேயனோ சிவமந்திரங்களை உரைத்து, சிவனை வழிபாடு செய்துகொண்டு இருந்தமையால், எம தூதர்கள் நெருங்கியதும், தவ வலிமையால் தர்மநெறியின் தீ, பெரும் நெருப்பாய் எழுந்து தூதர்களை தடுக்க, தூதர்கள் பயந்து எமலோகம் திரும்பி நிலைமையைக் கூறினர்.

இதை அறிந்த எமதர்மன் தானே தனது எருமை வாகனத்தில் ஏறி, பூலோகம் வந்தான். எமதர்மனின் பயங்கரமான அலைவீசும் கண்களையும் கரிய உடம்பினையும் கண்ட மார்க்கண்டேயன் அச்சமடைந்து, இறைவா, உனது திருவடியே என்னைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறி, தான் வழிபட்டுக்கொண்டிருந்த சிவலிங்கத்தை தனது இரு கரத்தாலும் இறுககட்டிக் கொண்டான். எமதர்மன் அதை உணராதவனாய் தனது பாசக்கயிற்றை மார்க்கண்டேயனை நோக்கி வீசினான். பாசக்கயிறு மார்க்கண்டேயனோடு அவன் அணைத்துக் கட்டியபடி இருந்த சிவலிங்கத் திருமேனியிலும் பட்டு நின்றது. சென்ற உடனே எவர் உயிரையும் எடுத்துக் கொண்டு வரும் அந்த பலமிக்க கயிறு செயல்படாமல் போனது. சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிபட்டு எமனை தன் காலால் உதைத்து மூர்ச்சையடைந்து விழச்செய்தார். "மார்க்கண்டேயா் என்மீது கொண்ட உனது அளவில்லா அன்பால் என்றும் மரணமில்லாமல் பதினாறு வயது இளமையுடனேயே வாழ்வாய்" என்று வரம் அளித்தார்.

பிள்ளைகள் இறைவனால் அருளப்பட்ட செல்வம் என்று விவிலியம் கூறுகிறது. பிள்ளைகள் புகழை அடைவதும், புகழை அடையாமலிருப்பதும் அவர்கள் கையில்தான் இருக்கின்றது என்றபோதிலும், அவர்களை வளர்க்கும் பெற்றோருக்கும் அதில் பொறுப்பு இருக்கிறது. பெற்றோர்கள் இறை நம்பிக்கை உடையவர்களாகவும், ஒழுக்கமுடையவர்களாகவும் இருந்தால் தான், பிள்ளைகளும் அதே பண்பை உடையவர்களாக விளங்குவார்கள்.

மார்க்கண்டேயன் என்றும் மரணமில்லாமல் 16 வயது இளமையுடன் எவ்வாறு வாழ நேர்ந்தது? அவனுடைய பெற்றோர் இறைவனுக்கு பூஜை செய்வதை கடமையாகக் கொண்டு செயல்பட்டு வந்தனர். அதினால் மார்க்கண்டேயனுக்கும் அவர்களைப் போலவே நற்குணம் ஏற்பட்டது. எனினும் மரணத்தை வெல்லும் தன்மை அவன் நல்வினையால் ஏற்பட்டது என்று பார்க்கிறோம்.

இறைவன் அருளிய செல்வமாகிய பிள்ளைகளை ஒரு சிற்பியைப்போல நல்ல வடிவமாக்குவது பெற்றோரின் கைகளில் இருக்கிறது. சிற்பத்திற்கு வலிக்கும் என்று உளியால் சிற்பி அடிக்காமலிருந்தால் நல்ல சிற்பம் உருவாகுமா? அதேவிதமாக கண்டித்தால் பிள்ளை வருத்தப்படுவான் என்று பெற்றோர் நினைத்தால், காட்டு மிராண்டியாகத்தான் விளங்குவார்கள், சான்றோர்களாக மாட்டார்கள். மார்க்கண்டேயனின் பெற்றோர் உலகம் நன்மை அடைய வேள்விகளை செய்ய வாரிசு கோரினர். அவர்களின் சுயமற்ற வாழ்க்கைதெள்ளத் தெளிவாகதெரிகிறது. தன் பெயர் சொல்லவோ, தன் ஆஸ்தியை அனுபவிக்கவோ ஒரு பிள்ளையை அவர்கள் கேட்கவில்லை. சுயநலமற்ற எண்ணமிருந்ததால்தான் மார்க்கண்டேயனின் பிரார்த்தனை சக்தி பெற்றது.

மார்க்கண்டேயனைப் போல மரணமடையாமலிருக்க, ஜீவன் முக்தியை இலவசமாக அருளுகிறார் ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா. அவரின் அருளுரைகளையும், போதனைகளையும் கேட்டு, படித்து அறிந்து மரணமில்லா பெருவாழ்வைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**– தொடரும்...**

# கலியை அழிக்க

அன்பானவர்களே, மனிதன் தனக்குக் கொடுத்த வாழ்க்கை நெறிமுறைகளை தவற விடும்போது, இறைவன் பல அவதாரங்களை எடுத்து நல்வழிகளைக் கூறுகிறார் என்பதை "மனுஜோதி" வாசகர்கள் நன்கறிவர். பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணர் இதை கூறியுள்ளதை நாம் அறிவோம்.

அப்படி அவதாரம் எடுக்கும் இறைவன், ஒவ்வொரு முறையும் தனது செயல்பாட்டை மாற்றி, அதாவது கடந்த அவதாரம் செய்த காரியங்களை மாற்றி செயல்படுகிறார். இந்த உண்மையை இராமாயணம் மற்றும் மகாபாரதத்தில் இராமருக்கும், கிருஷ்ணருக்கும் உள்ள வாழ்க்கையின் வாயிலாகக் காணலாம்.

இராமராக வந்த சமயம் ஒரு வில், ஒரு சொல், ஓர் இல் என செயல்பட்டார் என்பதை இலக்கியவாதிகள் தங்களின் சொல்வடிவில் எடுத்து இயம்பி உள்ளனர். அப்படிப்பட்ட வாழ்வின் மூலம்தான் தர்மத்தை நிலைநாட்ட முடியும் என்பதையும் இராமர் அதற்காகத்தான் தன் வாழ்வில் வந்த அநேக கஷ்டங்களை சகித்து, இடர்பாடுகளை களைந்து செயல்பட்டார்.

அப்படி அவர் செயல்பட்டது அவருடைய பக்தர்களின் மனதில் ஆழப் பதிந்திருந்தது. இந்த தன்மையின் காரணமாக அவர் மேல் அன்பு வைத்து, இராமர் கூறும் காரியங்களுக்குக் கீழ்ப்படிந்து, பரம்பொருளின் எல்லையற்ற சக்தியை வெளிப்படுத்தி, மனிதனால் இயலாத காரியத்தையும் செய்தனர். ஆனால் கடவுள் எப்படியும் வாழ்ந்து தர்மத்தை ஸ்தாபிப்பார் என்ற தெளிவில்லாதிருந்தனர். இப்படியிருப்பவர்கள் ஆண்டவனின் முழுமையான மகிமையைக் காணத் தவறுகின்றனர். அதன் காரணமாக அவர்களை இவ்வுலகத்தின் கஷ்ட துன்பங்கள் பின் தொடர்கின்றன.

இதைத்தான் கீதையில் என்னை உள்ளபடி உணர்ந்தறிந்தவனே அல்லாமல், வெறுமனே கடவுளைப் பின்பற்றுவதல்ல என்று கூறினார். உதாரணத்திற்கு விவிலியத்தில் வரும் மோசே என்பவர் இறைவனின் வீட்டாரில் எங்கும் உண்மை உள்ளவராக இருந்தார் என்பதைக் கூறுகிறது. அப்படியிருந்தும் இறைவனின் நடவடிக்கைகளை சரியாக உணராததால் இறைவனின் ஒரு பகுதியை மட்டுமே பார்த்திருக்கிறார்.

இதே போல கிருஷ்ண அவதாரத்தின் போது, இராமரின் பிரிய சிஷ்யனான ஆஞ்சநேயர் இருந்ததை காண முடிகிறது. துவாபர யுக காலத்தில் கிருஷ்ணர் தன் மனைவிகளான ருக்மணி, பாமாவோடு 16,000 கோபியர்களாக இருந்ததை கண்ட அனுமன் அவரை பலவாறாக தூஷித்து, கிருஷ்ணரை ஏற்க மறுத்து சண்டையும் செய்கிறார்.

எனது இராமனோ ஏகபத்தினி விரதர். நீரோ பெண்பிரியராய் இருக்கிறீர். அப்படியிருக்க நீர் அவதாரமாக எப்படி ஆக முடியும் என கேள்விகளையும் தொடுத்தார். இவ்வாறே ஜாம்பவானும் கிருஷ்ணர்தான் அந்த அவதாரம் என்பதை உணராதிருந்தார். ஆனால் இராமரே கிருஷ்ணராக ஜாம்பவானின் கோரிக்கையை நிறைவேற்ற அவனிடம் வந்தார். பார்ப்பதற்கு இராமரைப்போல வாழ்க்கை முறைகள் இல்லாமல் இருந்தாலும், நோக்கம் ஒன்றாக இருந்தது. அது மட்டுமல்ல கிருஷ்ணர் இராமர்போலவே அநேகரின் துயர் துடைத்து, அக்கால கலி சேஷ்டைகளை அழித்து, தர்ம ராஜ்யத்தையும் நிலைநாட்டினார்.

இந்த விதமாகத்தான் இன்றைய கலியுகத்தில் அவதரித்து ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா அவர்கள் கலியை அழித்து, தர்மத்தை நிலை நாட்டி இருக்கிறார்கள் என்பதை இச்சமயம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு யுகத்திலும் கலியனின் செயல்பாடுகளை வைத்து, பரமபுருஷராக கிறிஸ்து வடிவெடுக்கும் செயல்பாடுகளை வைத்து, பரமாத்மா தன் வாழ்வின் வழி முறைகளை மாற்றிக் கொண்டு கலியனை அழிக்கிறார்.

இன்றைய உலகில் பல மதங்கள், அதற்கேற்ப வழிபாட்டு முறைகள், அதற்கேற்ப உடை, உணவு மற்றும் பழக்க வழக்கங்களில் மாறுபட்டு, தனித்தனியாக கொள்கைகளை வைத்துக்கொண்டு, சுக்கல் நூறாக பிரிவினையை வளர்த்துக் கொண்டுள்ளது. இவற்றையெல்லாம் அலசி ஆராயும் மனிதன் இறுதியில் ஏதோவொன்றில் தன்னை இணைத்துக்கொண்டு, மற்றவர்களைக் குறைகூறி, தன் வழிதான் சரி என்பர். ஆகவே அனைவரும் இதை பின்பற்றுங்கள் என்று பிரச்சாரமும் செய்கிறார்கள்.

ஆனால் கலியனின் தந்திரத்தை உணராமல் மக்கள் ஏதோ ஒரு வழியில் கலியனின் கண்ணியில் அகப்பட்டுக்கொள்கின்றனர். அதனால் கலியனின் தன்மையை சரிவர புரிவது மிகவும் முக்கியமானது. **கலியனின் தன்மையை சரிவர புரிந்தவர் இறைவன் ஒருவரே.**

சகுனியின் சூழ்ச்சிகளை சரிவர உணர்ந்த ஸ்ரீ கிருஷ்ணரைப்போல, இக்கால கலியனின் தந்திரங்களை முற்றிலும் உணர்ந்த ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா, கலியை அழிக்க தன் வாழ்வில் கண்டது "ஒன்றே குலம்

ஒருவனே தேவன்” என்ற உயர்ந்த நெறி முறையாகும். இச்சொல்லை திருமூலர் கூறினார் என்று மேடைகளில் முழங்குவதை இக்காலத்தில் நாம் எங்கும் காணமுடிகிறது. அதை கடைபிடிக்காமல் வெறும் முழக்கத்தால் என்ன பயன்?

ஆனால் பகவான் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவோ முதலில் தன்னிலும், தன் குடும்பத்திலும் கடைபிடித்து, பின்னர் தன் பக்தர்களையும் கடைபிடிக்கச் செய்துள்ளார். உதாரணத்திற்கு தன் மூன்று பிள்ளைகளுக்கும் குலம் மற்றும் தேசம் பாராமல் திருமணங்களை முடித்து வைத்தார். பிறகு தன் பக்தர்களுக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆணுக்கும், தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்ணையும், மலேசியாவைச் சேர்ந்த பெண்ணுக்கு ஆந்திராவைச் சேர்ந்த ஆணுமாக இணைத்து, இன்று உலகத்தையே ஒன்றாக இணைத்துள்ளார். ஒரே குலம், ஒரே நாடு என்பதை நடைமுறைப்படுத்தி உள்ளார்.

அதேபோல் “ஒருவனே தேவன்” என்பதை ஒரு மதத்தைச் சார்ந்த இறைவனின் தன்மையும், அதன் வேதநூல் மற்ற மத வேத நூலுக்கும் உள்ள ஒற்றுமையை விளக்கி, கிறிஸ்தவர்கள் பகவத்கீதை மற்றும் குர்-ஆனை வாசிக்கும்படியும், இந்துவாக இருப்போர் விவிலியம் மற்றும் குர்-ஆனை வாசிக்கவும், முஸ்லீம்கள் கீதை மற்றும் விவிலியத்தை வாசிப்பதும் மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தி அவற்றை வாசிக்கவும் செய்தார்.

குல்லா இல்லாத முஸ்லீமாகவும், ருத்ராட்சை இல்லாத இந்துவாகவும், சிலுவை அணியாத கிறிஸ்தவராகவும் வாழ்வது அவசியம் என்று நெறிமுறைப்படுத்தி வாழ்ந்து, மற்றவர்களையும் வாழ செய்திருக்கிறார். இப்படி வாழ்வதால்தான் பரமாத்மாவின் சக்தியை முழுமையாகப் பெறவும், கலியின் பிரிவினையால் வரும் அழிவைத் தடுக்கவும் முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணரும்வண்ணம், அநேக உதாரணங்களோடு கூடிய ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் உபந்யாசனங்களில் விரிவாக விளக்கியுள்ளார்.

இன்றைய உலகம் பிரிவினை வாதத்தால் ஒன்று மற்றொன்றால் அழிவதைக் கண்கூடாக காண்கிறோம். இது ஏதோ மனிதர்களின் பிரிவினை அல்ல. கலிபுருஷனின் மிகப் பெரிய சூழ்ச்சியாகும். முதலில் தனி மனித வாழ்வில் கலி செயல்படாமல் தடுத்தோமானால், பின்னர் குடும்பம், பிறகு நாடு, தேசமாக சேர்ந்து கலியை வெற்றிகொள்ளலாம்.

# சிருஷ்டிப்பிலுள்ள அதிசயங்கள்

மனித உடலிலுள்ள நரம்பு மண்டலம் சிக்கலானது, பல பிரிவுகளையுடையது, விஸ்தாரமானது. இருதயம் எப்பொழுது துடிக்க வேண்டும், கை, கால்கள் எப்பொழுது அசைய வேண்டும், நுரையீரல்கள் எப்பொழுது காற்றை உள்வாங்க வேண்டும் போன்ற செய்திகள், இரவும் பகலும் நரம்பு மண்டலத்தின் கோடிக்கணக்கான அணுக்கள் மூலம் அனுப்பப்படுகின்றன.

மனிதனுடைய நாக்கில் 3000 ருசி பார்க்கும் அணுக்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் மூளைக்கு தொடர்புடையதாக உள்ளது. மனிதனுடைய காதுகளில் 10,000 கேட்கும் திறன்வாய்ந்த அணுக்கள் உள்ளன. மனித சிறுநீரகம் மிக விஸ்தாரமான வடிகட்டும் கருவியாகும். அதற்கு 64 மைல் அளவுக்கு குழாய்கள் உள்ளன.

ஒவ்வொரு 24 மணி நேரமும் அவை 45 காலன் (Gallon) திரவத்தை இரத்தத்திலிருந்து வடிகட்டி அதிலுள்ள யூரியா, அம்மோனியா ஆகிய அசுத்தமானவற்றைப் பிரித்து அதை ½ காலன் யூரினாக்குகிறது. மீதமுள்ள 44 ½ காலன் சுத்திகரிக்கப்பட்ட திரவம் மறுபடியும் இரத்தத்திற்கு அனுப்பப்படுகிறது. மனித சரீரத்தின் இரத்தக் குழாய்கள்தான் இவ்வுலகத்தின் மிகப் பிரம்மாண்டமான போக்குவரத்து கழகமாகும். ஏறக்குறைய 60,000-த்திலிருந்து ஒரு லட்சம் மைல் அளவுக்கு தடங்கள் உள்ளன. மனித சரீரத்தில் பாதிக்கு மேல் தசைகளால் ஆனது.

இப்படிப்பட்ட சரீரத்தை உண்டாக்கினவன் யார்? அவனே இறைவன்!!! இச்சரீரத்தை இறைவன் நமக்கு அருளியதற்கு நாம் குறைந்தபட்சம் நன்றியாவது செலுத்த வேண்டாமா?

# ஓம் நமோ பகவதே ஸ்ரீ லஹரி கிருஷ்ணாய!

இறையே அபயம் ஃசூ.பித் தத்துவம்! யாவும் இறையின் உபயம்!

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! எனும் மா மந்திர மொழியினை உலகிற்கு தந்து வழி காட்டிய உத்தமர்கள் வரலாறு இது. காலத்தால் அழியாத கருத்துக் கருவூலம். வருங்கால சந்ததிக்கு வைப்பு நிதி. இந்த உலகை தன் இச்சையின் பொருட்டு படைத்து காத்து அருளிச் செய்யும் அளவற்ற அருளாளரும், நிகரற்ற அன்புடையோருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவாதி தேவன் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவுக்கேபுகழனைத்தும்அவரருளால் அவர் தம் திருவடி தொழுது, அவர் எம் அகத்தே இருந்து பணிக்கும் வண்ணம் இந்த மனுஜோதி மண்ணின் ஒரு சிறு துகள் எழுத வருகிறது. உலகில் தோன்றிய காலத்தே எத்தனை கோடி பேர் தங்கள் எண்ணப்படி இச்சைப்படியெல்லாம் வாழ்ந்து மறைந்தனர்.

ஆனால் உலகிலே தங்கள் காலச் சுவடுகளை இறை வழியிலே அவர் காட்டிய நெறியிலே வாழ்ந்து, இந்த வையத்தையும் வாழ விட்டவர்கள் ஃசூ.பி எனும் இறைநேசர்கள். பாக்தாத் நகரிலே தோன்றிய முஹ்யத்தின் அப்துல் காதிர் ஜெயிலானி முதல் மனுஜோதி ஆசிரமத்தில் வாழ்ந்திடும் மா தேவாசீர் லாறி எனும் தெய்வீகப் பெரும் மகனாரின் வாழ்வும் வாக்கும் இந்த வரிசையில் வரும்.

முதலிலே இந்த மண்ணைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள். அறிந்தும், தெரிந்தும் தேர்ந்தும், தெளிந்தும் இதன் மாண்பினை ஆறறிவுடன் அணுகுங்கள். பாற்கடலில் வையத்துயின்ற பரந்தாமன் ஸ்ரீமந் நாராயணர் ஆகிய ஸ்ரீ லஹரி கிருஷ்ணா கலியுகத்திலே நம்முன், நம்முள் நடமாடும் புண்ணிய பூமி இது. இறைவன் ஒருவனே, தமது தாய், தந்தை, சுற்றம், வாழ்வு என எண்ணி வாழ்ந்திடும் சீலமுடையோர் வாழ்விடம். இங்கு வசிக்கும் நாங்களும், வாசிக்கும் நீங்களும் அகத்தே இருத்தி, புறத்தே தொழும் ஆன்ம நாயகன் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா.

வசிக்கவும் (நம்முள்ளே) வாசிக்கவும் உமது நாமத்தை பூசிக்கவும், யோசிக்கவும் வாழ்ந்திட கற்றுத்தரும் பூமி இது. பன்னெடுங்காலம் தவம் செய்யும் யோகியரும், ஞானியரும் கண்டறியா இறையை தங்கள் வாழ்விலே ஆற்றும் கடமையின் மடமை இருளகற்றும் அறிவுடையோர் வாழ்வது. விண்ணும் மண்ணும் கண்டறியா தேவமுதல்வனை, ஆதி நாதனை தங்கள் இதயத்தில் ஏற்றி இரவு பகல் உண்ணாது, உறங்காது அவர் நாமம் பாடிப் பரவிதாளமிடுபவர்கள். இந்த உலகை தளமாக்குவார்கள், யாத்திரை தலமாக்குவார்கள். விரிக்கிற்பெருகும் அவர்தம் புகழ்போல. கல்லடியும், சொல்லடியும் பட்டு இறையின் கருணை ஒன்றே காக்கும் அரண் எனக்கருதி முரண்பட்டவர்களை எல்லாம் இறை நாமத்தால் சரணடைய வைத்தவர்கள்.

வாழ்வும் வாக்கும் ஃசூ.பித் தத்துவம். ஏகத்துவம் ஏகன் ஒருவனே! உயிர்க்குலம் ஒன்றே! எனும் சுருத்முடி மோனத்தின் ஒலி! ஒளி! யாவும். ஒலியுல்லாஹ் (அல்லாஹ்வின் ஒலி) எனும் அற்புதப் பெயருடையோர் அவர்கள் வரலாறு வற்றா ஜீவ நதியாக பொங்கு கங்கையெனப் பெருகிவரும். உலகினர் உள்ளங்களின் பெருவெள்ளமெனப் பாய்ந்து பரவி ஞானப்பயிர் தழைக்க வளரும். கடலனைய பணியிலே இஃது ஒரு சிறு திவலை.

ஆதிநாயகனின் ஒளியிலே இந்த சிறு திவலை வர்ணஜாலம் காட்டும் அவனருளால். வானவில் காட்டும், சப்தஸ்வரங்கள் பேசும். ஏழு இடிமுழக்கங்கள் கேட்கும். கிழக்கே தோன்றிடும் மின்னல் கீ(தா)த மழை பொழியும்! அஃவேதகீதையாக! நாதப் பண்ணிசையாக கடையனையும் கடைத்தேற்றும் வரலாற்றுச் சான்றுகளுடன் தங்கள் மனவானில் ஒளிவிடும். தியாக சீலர்களின்சீர்மிகு வாழ்க்கையைவாழும் சத்தியநகரத்திலே காலடி மண் வரைகிறது.

அது ஓவியமாகலாம் காவியமாகலாம்! காப்பியமாகலாம்! தூயோனின் கைத்தூரிகை இது! யாவும் அவனருளே! யாதும் அவன் செயலே. ***- வான் மறையாக வ(ள)ரும்***

**- தேவகவி சுவாமிஜி அன்பிற்கரசு**

# மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?

மனம் எப்படி நினைக்கிறதோ நம்முடைய சரீரமும் அதற்கு வளைந்து கொடுக்கிறது; எனவே மனிதனுடைய வாழ்க்கையில் நன்மைக்கும் தீமைக்கும் அவனுடைய மனம் மட்டுமே காரணம். எதில் கறை பட்டாலும் சுத்தம் செய்து விடலாம்; மனதானது கறைபட்டால் அதைச் சுத்தம் செய்யமுடியாது. நம் உள்ளம் நல்லதாக இருந்தால் உலகில் நாம் பார்க்கும் மனிதர்களும், பொருள்களும் நல்லதாகவே காணப்படும். நம்முடைய மனம் கறைபட்டிருந்தால், எதுவும் சுத்தமாயிராது. நம்முடைய மனமானது சுத்தமாக இருந்தால் நாம் சகலத்திலும் சுத்தமாக இருப்போம் என்பதை முதலாவது புரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணமாக, அர்ஜுனனிடம் கிருஷ்ணர் நீ சென்று இந்த ஊரிலே எத்தனை கெட்டவர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து விட்டு வா என்று சொல்லி அனுப்பினார். அர்ஜுனன் திரும்பி வந்து, கிருஷ்ணரிடம் யாருமே இல்லை என்று சொன்னான். துரியோதனனைப் பார்த்து நீ போய் இந்த ஊரிலே எத்தனை நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று போய் பார்த்து விட்டு வா என்று சொன்னார். அவனோ கிருஷ்ணரிடம் திரும்ப வந்து ஒரு நல்லவர்கள் கூட இல்லை என்று சொன்னான்.

நீங்கள் செய்கிற செயல்களின் மூலமாக உங்களின் குணத்தை மற்றவர்களுக்குக் காண்பிக்கிறீர்கள். அதன் மூலம் நீங்கள் சுத்தமானவரா என்று அவர்கள் அறிந்துகொள்வர். ஒரு சிறிய குழந்தையாக இருந்தாலும், எப்படி சுத்தமாய் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். சுத்தமாய் இருப்பது இறை பக்திக்கு அடுத்ததாக இருக்கிறது.

மனிதனின் மனம் பிரச்சனைகளைத் தோற்றுவிப்பதும், சந்தோஷத்தை இழந்து தவிப்பதற்கும் காரணமாக உள்ளது. எப்போதுமே குழப்பத்தில் இருக்கும் மனமானது அதிலிருந்து தப்பிப்பதற்காக ஏதாவது ஒன்றை நாடும். அப்படி மனிதன் தேர்ந்தெடுக்கும் வழி, ஒன்று போதைக்கு அடிமையாகுதல், மற்றொன்று வன்முறையில் ஈடுபடுவது, இறுதியாக இறைவனிடம் தியானம் செய்வது போன்றவையாகும்.

ஒருவனின் மனதானது எப்போதும் போராட்டத்திலும், குழப்பத்திலும் நிறைந்திருக்குமானால், அப்பேர்ப்பட்டவனுக்கு பிரச்சனைகள் வீடு தேடி வரும். இப்படி போராடியே பழக்கப்பட்டுப் போன மனம் அதைப் பற்றிய சிந்தனைகளை மட்டும்தான் உண்டு பண்ணும். ஆகவே கடந்துபோன விஷயங்களைப் பற்றி வருந்தக்கூடாது; வருவதைப் பற்றி கற்பனை செய்யவும் கூடாது.

சிலர் மனநிம்மதியைத் தேடி வேற்று நாடுகளுக்கோ அல்லது புனித யாத்திரைக்கோ, இமய மலைக்கோ செல்வார்கள். சிலர் கோவிலுக்குச் செல்வர். கோவிலுக்குள்ளே போய் அர்ச்சனை செய்து முடிக்கும் வரை அந்த தெய்வத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் அவர்களது மனம், கோவிலை விட்டு வெளியே வந்ததும், வேதாளம் முருங்கை மரத்தில் ஏறின கதையாக, பழையபடி தெய்வ சிந்தனையை விட்டு விட்டு, மனதில் குழப்பமான எண்ணங்கள் வந்துவிடும்.

இறைவனை நினைக்கும் அந்த நேரத்தில் மட்டும் பரிகாரங்கள் செய்து, மந்திரங்கள் ஜெபித்து, பூஜை செய்வதில் எந்தவித பிரயோஜனமும் இல்லை. நாம் தனிமையில் இருக்கும்போதும் இறைவனை துதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும். இறைவனுக்குரிய கிரயத்தை நீங்கள் செலுத்துவதற்கு உங்களுக்கு மனம் இல்லையென்றால், நீங்கள் அவரிடம் இருந்து எதையும் பெற்றுக்கொள்ளவே முடியாது.

ஒருசிலருக்கோ தெய்வத்தை நினைத்துக் கொண்டிருக்கும்போதுகூட வேறு சிந்தனைகள் ஏற்படும். மனதில் தீய எண்ணங்கள் குடிகொண்டிருந்தால் இறை பயத்தையும், மனிதத்தன்மையையும் இழந்துவிடுகிறீர்கள். மாறாக கோபம், பொறாமை, வஞ்சக எண்ணங்கள் பெருகுகிறது. இந்த வாழ்க்கையில் வேண்டுமானால் இறை சிந்தனையில்லாமல் சுகபோகத்தை அனுபவிக்கலாம். ஆனால் அது உண்மையான மகிழ்ச்சி அல்ல. நமது எண்ணங்கள் மற்றும் செயல்கள் அனைத்துமே

இறைவனுக்காகவும், அவருடைய சித்தத்தை இந்த பூமியில் நிறைவேற்றுவதற்காகவுமே, நாம் இவ்வுலகில் வாழ்கிறோம் என்கிற மன உறுதியுடன் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இரும்பைப் போல பலத்தை நாம் இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். மேலும் அவருடைய அருளைப் பெறுவதற்கு இது வழியமைக்கும்.

இறை சிந்தனை நம் மனதில் நிலைத்திருக்க அதை எப்படி பழக்குவிக்கவேண்டும் என்றும், நடைமுறை வாழ்க்கையில் மனதை பக்குவப்படுத்திக் கொள்ள என்ன செய்யவேண்டும் என்றும், இந்த கட்டுரையைப் படித்து தெரிந்துகொள்ளலாம்.

Kj yht J **திரு. தேவாசீர் லாறி அவர்கள் கூறும் விளக்கத்தைப் பார்போம்.** நம் மனதை தூய்மையாக வைத்திருந்தால்தான் பல காரியங்களை நாம் செம்மையாகச் செய்ய முடியும். நம்முடைய மனதானது மூன்று நிலைகளை உடையது. 1. மேல்நிலை 2. நடுநிலை 3. அடிநிலை என்று மூன்றாகப் பிரிக்கலாம். ஏனென்றால் இந்த மூன்று நிலைகளும் வெவ்வேறான ஸ்திதியிலே இருக்கின்றன.

ஒருவனுடைய மனதானது எப்போதுமே தெய்வீக சிந்தனையுடையதாக இருக்குமானால் அதுவே மேல்நிலை என்று சொல்லப்படுகிறது. நடுநிலை அதாவது இன்றைக்கு நடக்கும் காரியங்களை வைத்து நம்முடைய மனதை வளப்படுத்திக் கொள்வது நடுநிலை என்று சொல்லப்படுகிறது. எப்பொழுதுமே கீழ்த்தரமான சிந்தனையுடையதாக இருக்குமானால் அதுவே அடிநிலை என்று சொல்லப்படுகிறது.

**மூன்றாவது நிலையான அடிநிலை என்றால்:** இந்த உலகத்திலே எதை சம்பாதிக்கலாம்? அதற்காக என்ன செய்யலாம்? அதை எப்படிச் செய்யலாம்? என்று 24 மணி நேரமும் அதே சிந்தனையில் தங்களுடைய வாழ்வை செலவிடுவார்கள்.

**நடுநிலை** என்றால்: இன்றைக்கு உள்ளதைப்பார், நன்றாகச் சாப்பிடு. நன்றாக உடையணிந்து கொள், நாளையைப் பற்றி தெரியாது என்று சொல்லி தங்களுக்குக் கிடைத்த பணத்தை எல்லாம் வீணாகச் செலவழிப்பார்கள். அப்படிப்பட்ட மனநிலையை உடையவர்கள் தங்களைக் குறித்தும் மற்றவர்களைக் குறித்தும் எந்தவிதத்திலும் கவலைப்பட மாட்டார்கள். அதுவும் ஒருவிதமான மனநிலை.

எப்பொழுதுபார்த்தாலும் சிலர், "டேய்! நீ போகும்போது ஜாக்கிரதையாகப் போ! ஆட்டோவோ, காரோ உன்னை இடித்துவிடாமல் பார்த்துக்கொள்! பஸ்ஸில் ஏறினால் கீழே விழுந்துவிடாமல் பார்த்துக் கொள்" என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அப்படி நினைக்கிறவர்கள்தான் விழுந்துவிடுவார்கள். நம்முடைய வாழ்க்கையில் இது நடந்து விடுமோ என்று நாம் பயந்து கொண்டிருக்கும் காரியங்கள்தான் நமக்கு நேரிடும். எனக்கும் கூட அப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டது.

நான் ஒரு முறை பத்திரிக்கையிலே என்னுடைய ராசி பலனைப் படித்தபோது, அதில் ஜுன் மாதத்திலே உனக்கு ஒரு விபத்து உண்டாகும் என்று போடப்பட்டிருந்தது. நான் அதே எண்ணத்தில் காரை மிகக் கவனமாக ஓட்டிக்கொண்டே இருந்தேன். சொன்னதுபோல ஜுன் மாதத்திலே உயிர் சேதம் ஏதும் ஏற்படாமல், ஒரு சிறிய விபத்து ஏற்பட்டது. அப்பொழுதுதான் நான் பயந்த காரியம் நடந்துவிட்டதே என நினைத்தேன். நம்முடைய மனதானது ஒருவித பதட்டமான நிலையில் இருக்கும்போது, அந்த பயத்திலே நாம் சில காரியங்களைச் செய்து விடுகிறோம்.

**மேல்நிலை** என்று சொல்லும்போது: சிலர் வேதங்களை படிப்பார்கள். ஆன்மீக புஸ்தகங்களைப் படிப்பார்கள். வரப்போகிற அழிவு பற்றிய சில காரியங்கள் அவர்களுக்குத் தெரியும். அதை மனதில் வைத்து அவர்கள் தங்கள் மனதைப் பக்குவப்படுத்தி, மற்றவர்களுக்கு இப்படிச் செய்யாதே, வேதத்தில் இப்படி சொல்லியிருக்கிறது; நாம் இப்படித்தான் வாழ வேண்டும். நல்லதையே செய்யுங்கள் என்று புத்திமதி சொல்லுவார்கள்.

நம்முடைய மனதை நல்லபடியாக வைத்து வாழவேண்டும் என்று பல அறிவுரைகளை நமக்குச் சொன்னவர்கள்தான், இன்று நம் மத்தியில் மகான்களாக திகழுகிறார்கள். அவர்கள்தான் மேல்நிலையைச் சார்ந்த மனவளம் கொண்டவர்கள். இறைவன் மனிதனுக்கு அருளிய வேதங்களை எல்லாம் படித்து ஆராய்ந்து, நாமும் நம்முடைய மனவளத்தை பெருக்கி பக்குவப்படுத்திக் கொள்வது நல்லது.

ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா கூறும் விளக்கம் என்னவென்றால், "வாரத்தின் ஏழு நாளில், ஏழாம் நாளான சனிக்கிழமையன்று இறைவனுக்காக செலவிட்டு, அந்த நாளில் மனதிற்கு ஓய்வு கொடுக்கும்பொழுது ஸ்ரீமந் நாராயணராகிய என்னிடமிருந்து மனநிம்மதி உங்களுக்குக் கிடைக்கிறது. மேலும் மனிதனுக்கு ஓய்வு என்பது அவசியமானதாக இருக்கிறது. ஏனென்றால் ஓய்வில்லாமல் இருக்கும்பொழுதுதான் குழப்பமான மனநிலை ஏற்படுகிறது. வாரத்தில் ஒருநாள் ஓய்வு அத்தியாவசியமானதுஎன்பதை நீங்கள் முதலாவது உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஓய்வெடுக்க தவறுவதால்தான் நமக்கு வியாதிகள் வருகின்றது. வாரத்தில் ஆறு நாட்கள் கடினமாக உழைத்தபின் ஒருநாள் முற்றிலுமாக ஓய்வு எடுக்கும்பொழுது நீங்கள் ஒருபோதும் வியாதிப்படமாட்டீர்கள். உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படாது. உங்கள் மனம் தெளிவாக இருக்கும். அதற்குப் பிறகு நீங்கள் இரட்டிப்பான வேலைகளைச் செய்யமுடியும். நாம் வாரத்தில் ஆறு நாட்களும் கடினமாக உழைக்கின்றோம். ஏழாவது நாளானசனிக்கிழமையிலோ இறைவனிடம் என்ன சொல்ல வேண்டுமென்றால், நீர் எங்களை ஆசீர்வதித்தாலொழிய, நாங்கள் செய்த எல்லா வேலைகளும் எங்களுக்கு பயனற்றது என்று கூற வேண்டும்.

ஒரு வருடத்திற்கு 52 ஓய்வுநாட்கள் இருக்கிறது. ஒரு வருடம் முழுவதும் நீங்கள் ஓய்வே இல்லாமல் வேலை செய்தீர்களானால், திடீரென்று உங்களுக்கு வியாதி வரும். நீங்கள் 52 நாட்கள் படுக்கையில் இருக்கவேண்டியது வரும். ஒருசமயம் ஒவ்வொரு வாரமும் ஏழு நாட்களிலும் நான் வேலைசெய்து கொண்டிருந்தேன். பின்னர், வியாதிப்பட்டு படுக்கையில் சுமார் 50 நாட்கள் இருந்தேன். அப்பொழுதுதான் வாரத்தில் ஒருநாள் ஓய்வு அத்தியாவசியமானது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

இந்த சரீரமானது உங்களுடைய வீடாக இருக்கிறது. ஒருநாள் இந்த வீட்டைவிட்டு நீங்கள் செல்ல வேண்டும். நீங்கள் தெய்வ நம்பிக்கையுள்ளவர்களாக மட்டும்இருப்பது காரியமல்ல. கோயிலைச் சுற்றிவிட்டு திரும்பவும் வருவதோ, தினமும் அல்லது வாரத்திற்கு ஒருமுறையோ தேவாலயத்திற்கு சென்று வருவதோ காரியமல்ல. தேவாலயத்திற்குச் சென்று வருவதின்மூலம் ஒரு மனிதன் தெய்வத்தின் குணமுடையவனாக முடியுமென்றால், ஒருகார் நிற்குமிடத்திற்கு ஒரு மனிதன்தினமும் சென்று வந்தால், அவன் ஒரு அம்பாஸிடர் காராக முடியும். ஆனால் இதையெல்லாம் நாம் நம்முடைய மன திருப்திக்காகச் செய்கிறோம்."

எனவே மனம் தெளிவாக இருந்தால்தான் நம்முடைய வாழ்க்கையும் சிறப்பானதாக அமையும். எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் அதை சமாளிக்கும் திறனை நம்முடைய மனதில் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அந்தசமயத்தில் மனம் பதறுவதால் நமக்கு நாமே பிரச்சனைகளைத் தோற்றுவித்துக் கொள்கிறோம். மனம் போன போக்கிலே மனிதன் போகக்கூடாது; மனதை புதிதாக மாற்றுவதற்கு, தொழுகை அல்லது பிரார்த்தனை, தியானம், ஸ்தோத்திரம் இவை அனைத்தும் இன்றியமையாதவைகள் ஆகும். இறைவனின் நாமத்தை பிரார்த்தித்தால் சாந்தியும், மகத்தான மன அமைதியும் ஆன்மாவிற்கு கிடைக்கும்.

நம்முடைய மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ள இறைவனிடம் ஜெபிப்பது, தியானிப்பது, வேதங்களைப் படிப்பது, உடலுக்குத் தேவையான ஓய்வை எடுத்துக் கொள்வது போன்ற செயல்களை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இது நம்முடைய மனதை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லுவதோடு, உங்கள் மனதை புதிதாக மாற்றுவதற்கு வழிவகுக்கும். வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமையில் நாம் ஓய்ந்திருந்து, அவரை துதித்து, தியானிப்பதின் மூலம் இறைவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்று வளமோடு இருப்போமாக!

# ஒருமைப்பாடு நிலவ ஆன்மீகக் கல்வி அவசியம்!

உலகில் வல்லரசு நாடுகள் எனப்படும் அமெரிக்கா, ரஷ்யா, போன்ற நாடுகள் விஞ்ஞானத்தில் முன்னேறியுள்ளன. இந்தியா மெய்ஞானம் என்று சொல்லப்படும் ஆன்மீகத்தில் முன்னறேியுள்ளது. இன்னும்கூட சில நாடுகள் அஞ்ஞான இருளில் மூழ்கியுள்ளதைப் பற்றியும் நாம் அறிவோம்.

நாம் ஆன்மீகத் துறையில் முன்னேற்றம் காண காரணமாய் இருப்பது இங்குள்ள இதிகாச காப்பியங்கள் எனப்படும் இராமாயணம், மகாபாரதம் போன்றவை ஆகும். குறிப்பாக இராமாயணம் பெண்ணாசை கூடாது என்பதையும், மகாபாரதம் மண்ணாசை கூடாது என்பதையும் விளக்கமாக எடுத்துரைக்கிறது.

இன்றைய இந்தியாவில் அரசியல் துறையில் உள்ளவர்கள் லஞ்சம், ஊழல் போன்ற புகார்களில் சிக்கி தங்கள் பெயருக்கு களங்கம் உண்டாக்குகிறார்கள். தங்களின் பொருளாதார வளர்ச்சி மற்றவர்களைக் காட்டிலும் உயர்வாக இருக்க வேண்டும் என்ற பேராசையால், வெறும் சட்டப் புஸ்தகங்களை மட்டுமே படித்து, சட்டத்திலுள்ள சந்து, பொந்துகள், ஓட்டைகள் இவைகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

வஞ்சகமாக பிறரை ஏமாற்றும் இந்த எண்ணம் வரக்காரணம் ஆன்மீகக் கல்வி இல்லாததேயாகும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல இவர்கள் படிக்கும் ஏட்டுக்கல்வி பொது அறிவையும், பொல்லாத சிந்தனையை மட்டும்தான் கொடுக்கிறது. எப்படியாவது பிறரை ஏமாற்றி, சுகபோகமாக வாழலாம் என்ற மோசமான சிந்தனையைத்தான் இந்த ஏட்டுக் கல்வி கற்றுத் தருகிறது. இந்த ஏட்டுச் சுரைக்காய் கல்வியைப் படித்துதான் குற்றங்கள், அறநெறிக்கு ஒவ்வாத செயல்கள், அராஜகம், கொடிய குற்றங்கள் செய்து ஜெயிலுக்கும், கோர்ட்டுக்கும் போகிறார்கள்.

இவர்கள் இளம் வயதிலேயே ஆன்மீகக் கல்வியை கற்றிருந்தால் ஒருவேளை ஒழுக்க சீலர்களாக வாழ்ந்திருப்பார்கள் அல்லவா! ஆன்மீகம் என்பது எல்லா மதங்களுக்கும் உரித்தான பொதுச் சொல்லாகும். எந்த ஒரு மதத்துக்கும் உரித்தான ஒன்றல்ல. எல்லா வேதங்களுமே அறநெறியைத்தான் போதிக்கின்றன. எல்லா சமயங்களுமே மனித நேயம், மகத்தானது என்றுதான் கூறுகிறது. பொய், களவு, திருட்டு, கொலை, கொள்ளை, லஞ்சம், ஊழல், அராஜகம், விபசாரம் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுதல் கூடாது. அது பாவச் செயல்கள் என்று பறைசாற்றுவதால்தான் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு குற்றச் செயல்கள் செய்யும் எண்ணம் குறைந்து காணப்படுகிறது. பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மதபேதம் பாராது ஆன்மீகக் கல்வியை ஏட்டுக் கல்வியோடு சேர்த்துக் கொடுத்தால், அவர்கள் வெளியே வரும்போது குற்றச் செயல்களில் ஈடுபடும் எண்ணம் குறைந்தோ அல்லது மறைந்தும் போகலாம் அல்லவா

இத்தகைய ஆன்மீகக் கல்வியை மனுஜோதி ஆசிரமம் உலகத்துக்கே கற்றுக் கொடுக்கிறது. எல்லா வேதங்களும் இங்கு வாசிக்கப்படுகிறது. இதனால்தான் ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற முற்போக்கான சிந்தனை அவர்களுக்கு வருகிறது. எனவே அவர்கள் புகட்டும் ஆன்மீகக் கல்வியை அரசாங்கமே நாட்டுக்குக் கற்றுத்தர முன் வர வேண்டும். ஆம்! ஏட்டுக் கல்வி விஞ்ஞான அறிவை வளர்க்கட்டும்! ஆன்மீகக் கல்வி மெய்ஞான அறிவை வளர்க்கட்டும்! இரண்டு வகையான கல்வியை எதிர்கால இந்தியா கற்றுக் கொண்டால் இந்தியா வல்லரசு நாடாக மட்டுமின்றி, நல்லரசு நாடாகவும் திகழும் என்பது திண்ணம்!

**- தூத்துக்குடி பாலு**

# கிழக்கே தோன்றிய மின்னல்

## பாலாசீர் லாறி முத்துக்கிருஷ்ணாவின் வாழ்க்கை சரிதை

கிறிஸ்தவ சபைகளாலும், பாதிரிமார்களாலும் பதில் சொல்லமுடியாத நான்கு முக்கியமான கேள்விகளை அவர் எழுப்பினார்.

**1. இயேசுதான் கிறிஸ்துவா? அப்படியானால் அவர் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்தவரா?**

**2. இயேசு உனக்காக மரித்தார் என்றால் நீ ஏன் மரிக்கவேண்டும்?**

**3. இயேசு வெள்ளிக்கிழமை மாலையில் மரித்து ஞாயிற்றுக்கிழமை காலையில் உயிர்த்தெழுந்திருந்தால்,மனுஷகுமாரன் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்கிறவேதாகம வசனம் அவருக்கு எப்படி பொருந்தும்?**

**4. என்னை யாரும் கொல்ல முடியாது என்று இயேசு சொல்லியிருக்க அவரை எப்படி சிலுவையில் அறைந்து கொன்றிருக்க முடியும்?**

1962–ம் ஆண்டு வாக்கில் தென்னிந்திய திருச்சபையின் ஏற்பாட்டின் பேரில் பிரச்சார கூட்டங்களை கர்நாடக மாநிலத்தில் நடத்தினார் பாலாசீர் லாறி முத்துக்கிருஷ்ணா.

அதன்பின்னர் 'சபை'களின் ஆதரவின்றி பெங்களூர், மைசூர், தும்கூர், கோலார் தங்கவயல் போன்ற இடங்களில் ஏராளமான பிரச்சார கூட்டங்களை நடத்தினார். இதன் விளைவாக பெருந்திரளான பெந்தேகொஸ்தே பக்தர்கள் மனுஷகுமாரனின் சத்தியத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர்.

1961–ம் ஆண்டிற்கு பிறகு ஆந்திர மாநிலத்தில் காலடி வைத்தார் மனுஷகுமாரன் பாலாசீர் லாறி முத்துக்கிருஷ்ணா. விசாகப்பட்டினம், காக்கிநாடா, விஜயநகரம், ஹைதராபாத், இராஜமுந்திரி மற்றும் பழங்குடியினர் வாழும் மலைப்பிரதேசங்கள், தெலுங்கானா, நெல்லூர், பிட்ரகுண்டா, சித்தூர், நாயுடுபேட் ஆகிய பகுதிகளில் தீவிரமான தனது ஆன்மீக பிரச்சாரத்தை தொடங்கினார்.

இங்கு அவருக்கும், அவரது கூட்டங்களுக்கும் அமோக வரவேற்பு இருந்தது. பத்து, இருபது என ஆரம்பத்தில் ஆசிரமத்திற்கு வரத் தொடங்கிய விசுவாசிகளின் எண்ணிக்கை ஆயிரம், இரண்டாயிரம் என பெருக ஆரம்பித்தது.

கிறிஸ்தவ மதப் பிரசங்கிகள் – பைபிளில் சொல்லப்பட்ட கருத்துக்களை பிரசங்கம் செய்வார்கள். முஸ்லீம் மதக்குருமார்களுக்கு கிறிஸ்தவ மற்றும் இந்து மத தத்துவங்கள் புரியாத புதிராக இருக்கும்.

இந்து மதவாதிகள் பகவத்கீதையை எடுத்துச் சொல்வார்கள் – கிறிஸ்தவ மதப் பிரசங்கிகள் இந்து இஸ்லாம் மற்றும் இந்து மதங்களின் உண்மைகளை அறியாதவர்களாக இருப்பார்கள். ஆனால், பாலாசீர் லாறி முத்துக்கிருஷ்ணா மட்டுமே உலகில் உள்ள அனைத்து மதங்களையும் அக்குவேறு ஆணிவேராக அலசி ஆய்ந்தவராக இருந்தார்.

அதனால் அவருடைய பிரசங்கங்களில், பைபிளின் கருத்துக்கள் நிறைந்து இருக்கும்; குர்–ஆனின் மணிமொழிகள் இடம்பெறும். பகவத்கீதையின் சாராம்சங்கள் சட்டென வந்து விழும்.

– தொடரும்